வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 28.08.2023 திங்கட்கிழமை | இதழ் : 261 | பக்கங்கள் : 16

## ‘ஷி யான் 6’ ஆய்வுக் கப்பலுக்கு அனுமதியளித்த இலங்கை அரசு!

கொழும்பு, ஒக. 28

நாரா எனப்படும் தேசிய நீரியல் வளங்கள் மற்றும் ஆராய்ச்சி முகவர் நிறுவனத்துடன் இலங்கையின் நீர்நிலைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ‘ஷி யான் 6’ எனும் சீன கடல்சார் ஆய்வு கப்பலுக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

நாரா நிறுவனம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் கோரிக்கைக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவின் இராணுவ மற்றும் கடற்படையின் போர்க்கப்பலான ஹாய் யங் 24 ஹோ கடந்த 10ஆம் திகதி கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்ததுடன், 12 ஆம் 11



## நல்லூர் சங்கிலியன் வீதியில் அதிகாலை வீடு புகுந்து கத்திமுனையில் கொள்ளை!

யாழ்ப்பாணம், ஒக. 21

யாழ். மாவட்டத்தில் கத்தி முனையில் தங்க நகைகள் கொள்ளையிடும் சம்பவங்களின் தொடர்ச்சியாக, நேற்று அதிகாலையும் நல்லூர், சங்கிலியன் வீதியில் உள்ள பிரதேச செயலக அரச உத்தியோகத்தர்களின் வீட்டில் 20 பவுண் நகையும் ஒரு தொகை பணமும் திருடப்பட்டுள்ளது

யாழ். மாவட்டத்தில் இரவு வேளைகளில் வீடுடைத்து நுழைந்து, வீட்டில் உள்ளவர்களை கத்திமுனையில் அச்சுறுத்தி நகை திருடும் மூன்று சம்பவங்கள் இவ்வாரம் பதிவாகியுள்ளன.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 11



# இனவாதச் சூறாவளி சுழன்றடித்தாலும் தமிழரை ஒருபோதும் அழிக்கமுடியாது

## கனடாவில் கூறினார் மனோ கணேசன் எம்.பி.



றொறன்ரோ, ஒகஸ்ட் 28

“இனவாத சூறாவளி சுழன்றடித்தாலும், சுற்றி சுற்றி அடித்தாலும், சுனாமியாக அடித்தாலும் சரி தமிழர்களை ஒழிக்கவோ, அழிக்கவோ முடியாது.”

- இவ்வாறு கனடா - றொறன்ரோவில் நடைபெற்ற தமிழர் தெருத் திருவிழாவில் உரையாற்றிய தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும், மலையகத்திலும், நாடு முழுக்கவும் யுத்தம் இல்லை. ஆனால், இனவாதம் இருக்கின்றது.

இனவாதத்தை அழித்து, வீழ்த்தி நியாயமான தீர்வைப் பெறுவோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

தமிழக தாயகம், இலங்கை தாயகம் ஆகியவற்றுக்கு வெளியே இங்கே கனடாவில் வாழ்கின்ற தமிழர்கள் தான் அதிக துடிப்புடன் இருக்கின்றீர்கள். இந்நோக்குக்காக நீங்கள் அதிக பங்களிக்க வேண்டும் - என்றார். (அ)

## கடும் வெப்பம் நிலவும் மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 28

இன்று தொடக்கம் செப்ரெம்பர் 7ஆம் திகதி வரை சூரியன் இலங்கைக்கு அண்மித்த அட்சர ரேகைகளுக்கு மேல் நேரடியாக உச்சம் கொடுக்கும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி இன்று நண்பகல் 12.11 மணிக்கு கோவிலன் முனை மற்றும் மல்லாகம் ஆகிய பகுதிகளில் சூரியன் உச்சம் கொடுக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் கடுமையான வெப்பம் நிலவுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 11

## 18 மாவட்டங்களில் கடுமையான வறட்சி

### குடிதண்ணீர் பற்றாக்குறையை எதிர்நோக்கும் 85,000 குடும்பங்கள்

கொழும்பு, ஒக. 28

நாட்டில் 18 மாவட்டங்களில் நிலவும் கடுமையான வறட்சி காரணமாக சுமார் 85,000 குடும்பங்கள் பாதுகாப்பான குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வறட்சியினால் 18 மாவட்டங்களில் 291,715 11

## வேட்பாளர் நாமலா? பஸிலா? பெரமுனவுக்குள் முரண்பாடு

கொழும்பு, ஒக. 28

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான பேச்சுகள் கடந்த சில வாரங்களாக உக்கிரமடைந்துள்ளதால் பொதுஜன பெரமுனவுக்குள் பல்வேறு கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

வேட்பாளர் யார் என்ற கோணத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் பனிப்போர் 11

## நடனமாடிக்கொண்டு இருந்தவர் திடீரென கீழே விழுந்து மரணம்

### தெல்லிப்பழையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக.28

மேடையில் நடனமாடிக்கொண்டிருந்த ஒருவர் திடீரென கீழே விழுந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று தெல்லிப்பழையில் இடம்பெற்றது.

தெல்லிப்பழையில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில், மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களது ஒன்று கூடல் நடைபெற்றது. இதன்போது 11

## இந்தியா - சீனாவுடன் இரு தரப்பு உறவில் எந்தவிதமான பதற்றங்களும் இல்லை!

### கூறுகிறார் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஒக. 28

இலங்கை, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையிலான இரு தரப்பு உறவுகளில் எவ் விதமான பதற்றங்களும் இல்லை என வெளிவிவகார அமைச்சர், அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் வருகை, சீன ஆய்வுக் கப்பலின் வருகை என்பன நிகழ்ச்சி நிரலிடப்பட்டட தன் அடிப்படையில் இடம்பெறுவதால் எவ் வித குழப்பங்களும் இல்லை என அவர் கூறினார்.

இலங்கைக்குள் போர் மற்றும் 11

## 4 உள்ளகக் கட்டமைப்புக்களுக்கு நிதியுதவி வழங்கவுள்ளது கனடா

கொழும்பு, ஒக. 28

இலங்கையில் அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சி நிர்வாகத்தை மேம்படுத்தல், பெண்கள் ஊக்குவிப்பு, சூழலியல்சார் நடவடிக்கைகள் என்பவற்றுக்காக இவ்வருடம் 4 உள்ளகக் கட்டமைப்புக்களுக்கு நிதியுதவி வழங்குவதாக கனேடிய தூதரகம் 11

## இப்படியும் நடக்கிறது

அநாதை விடுதி ஒன்றிலிருந்து ஒரு பெண் அழுது கொண்டிருந்தாள்.

'ஏன் அழுகிறாய்?'என்று அங்கே இருந்த பார்வையற்ற மூன்று பெண்கள் கேட்டனர்.

'என் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தேன். திடீரென இறந்துவிட்டது.' என்றாள் அந்தப் பெண்.

'பால் எப்படியிருக்கும்?' எனக் கேட்டாள் ஒரு பார்வையற்ற பெண்.

'வெள்ளையாக இருக்கும்' என்றார் அங்கிருந்த ஒருவர்.

'வெள்ளை எப்படி இருக்கும்' என அடுத்த பார்வையற்ற பெண் கேட்டாள்.

'கொக்கு மாதிரி இருக்கும்' என இன்னொருவர் சொன்னார்.

'கொக்கு எப்படி இருக்கும்' என மூன்றாவது பார்வையற்ற பெண் கேட்டாள்.

உடனே ஒரு கொக்கைப் பிடித்துக் கொண்டு வந்து அந்தப் பெண்களின் கைகளில் கொடுத்தார்கள்.

அதைத் தொட்டுப் பார்த்த அந்த பார்வையற்ற பெண்கள் 'இவ்வளவு பெரிய ஒரு பொருளை குழந்தையின் வாயில் திணித்தால் குழந்தை சாகாமல் என்ன செய்யும்?'

இதைப் போலத் தான் பல சமயங்களில் பல விடயங்களை சரியாகப் புரிந்து கொள்ளாமல் பலரும் கருத்துக்களை அள்ளி வீசுகிறார்கள். இது பார்வையற்றவர்களை புண்படுத்துவதற்கானதல்ல.

அந்தச் செய்தியை படித்ததும் இந்தக் கதைதான் ஞாபகத்திற்கு வந்தது.

'விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்கும் நோக்கில் செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டில் மேலும் ஒருவரை இந்திய தேசிய புலனாய்வு முகமை கைது செய்துள்ளது.

இதையடுத்து, இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 14ஆக அதிகரித்துள்ளது. கைதான நபர் சென்னையில் வசிப்பவர் என்றும் இலங்கை, இந்தியாவில் போதைப் பொருள், ஆயுத கடத்தல் மற்றும் விற்பனையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரின் பினாமியாக செயல்பட்டவர் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர் இந்தியாவில் தங்கியிருப்பதற்காக போலியான ஆவணங்களைத் தயாரித்து வைத்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் கைதானவர்கள் அனைவரும் போதைப் பொருளை கடத்திச் சம்பாதித்த பணம் மூலமாக விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்குவதற்காக ஆயுதங்களை குவிக்கவும் நிதி மூலத்தை உருவாக்கவும் முனைந்தனர் என்று இந்திய அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.'

இதுதான் அந்தச் செய்தி.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள் உருவாக்குவதற்காக தாங்கள் போதைப் பொருள் கடத்துவதாக குற்றவாளிகள் தெரிவித்திருப்பது என்னவோ உண்மையாக இருக்கலாம். ஆனால் அவர்கள் கூறுவதன் உண்மைத்தன்மையை அறிந்து கொள்ளமுடியாத அளவிற்கு இந்திய தேசிய புலனாய்வு முகமை இருக்கும் என்று யாரும் நம்பப்போவதில்லை.

இன்று இலங்கையின் வடக்கில் போதைப்பொருள் பாவனை கவலைதரும் அளவிற்கு அதிகரித்திருக்கின்றது. அது எங்கிருந்து வருகின்றது என்பதும் ஒன்றும் இரகசியமானது அல்ல. இலங்கையில் கைப்பற்றப்படும் போதைப் பொருள்களின் பெறுமதி பல கோடிகள் இருக்கும் என்றால் அத்தனை கோடிகளை முதலிட்டு அவற்றைக் கொள்வனவு செய்து இலங்கைக்கு கொண்டு வருவது என்பது சாதாரணர்களால் செய்யக்கூடியதல்ல. அது பல கோடி புரளும் ஒரு வர்த்தகமாக மாறியிருக்கும் போது அதில் ஈடுபடுபவர்களும் சாதாரணர்களல்லர். அப்படி இந்த போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் கைதாகும்போது அவர்கள் தங்கள் தனிப்பட்ட அந்த வர்த்தகத்தை புலிகளுக்காக செய்வதாகக் கூறி, தங்களை 'சுத்தப்படுத்த' முயற்சி செய்கின்றனர் என்பது இந்திய புலனாய்வாளர்களால் புரிந்து கொள்ளமுடியாதது அல்ல.

அப்படியிருந்தும், புலிகளை மீளுருவாக்க அங்கே முயற்சி நடக்கின்றது என்று இந்திய புலனாய்வாளர்கள் இவ்வாறு திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருப்பது, இலங்கையில் வாழும் தமிழர்களை மேலும் துன்பப்படுத்தவே செய்யும்.

இராணுவ முகாம்களை அகற்றவேண்டும் என்றும் ராணுவம் ஆக்கிரமித்துள்ள தனியார் காணிகளை விடுவிக்க வேண்டும் என்றும் இங்கே தமிழர்கள் போராடிக்கொண்டிருக்க, சென்னையில் புலிகளை மீளுருவாக்க முயற்சி நடக்கின்றது என்றும், இதுவரை பதினெட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் என்றும் வெளிவருகின்ற செய்திகள் மேலும் நெருக்கடியையே கொடுக்கும்.

போதை கடத்தல்காரர்களும் சமூக விரோதிகளும் தங்களை பாதுகாத்துக்கொள்ளப் பயன்படுத்தும் உத்தியை அப்படியே கிளிப்பிள்ளை போல வெளியிடுவது சரியானது தானா என்பதை சம்பந்தப்பட்டவர்கள் ஒன்றுக்கு பல தடவை யோசித்துப் பார்க்க வேண்டும்.

புலிகளை மீளுருவாக்க சென்னையிலிருந்து போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுகிறார்கள் என்பது, கொக்கைத் தடவிப்பார்த்துவிட்டு, இத்தனை பெரிய பொருளை குழந்தையின் வாயில் திணித்தால் எப்படி என்று கேட்டதுபோலத்தான் இது.

- ஊர்க்குருவி.

# விசிட் வீஸா மூலம் நாட்டை விட்டு வெளியேற முயன்ற 6 பேர் கைது!

கொழும்பு, ஓக. 28

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கடந்த வாரம் புதிதாக திறக்கப்பட்ட பாதுகாப்பான புலம்பெயர்ந்தோர் ஊக்குவிப்பு பிரிவில் விசிட் விஸாவில் நாட்டை விட்டு வெளியேற முயன்ற ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதன்படி, கைது செய்யப்பட்ட சந்தே நபர்கள் தங்கள் பயணத்தின் உண்மையான நோக்கத்தை அதிகாரிகளுக்கு நிரூபிக்க தவறிய காரணத்தினால் கிழக்கு ஐரோப்பிய நாட்டுக்கான அவர்களது பயணம் தடுக்கப்பட்ட பின்னர் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலாபகரமான வேலைகளை வழங்குவதாக வாக்குறுதியளித்த மனித கடத்தல்காரருக்கு 4,00,000 ரூபாய் வீதம் வழங்கி அவர்கள் தங்களுடைய வெளிநாட்டு இலக்கை அடைய முனைந்துள்ளனர் என விசாரணைகளின்போது தெரிய வந்ததாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் செனரத் யாப்பா தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாதுகாப்பான புலம்பெயர்ந்தோர் ஊக்குவிப்பு பிரிவானது கடந்த திங்கட்கிழமையன்று ஆரம்பிக்கப்படினும் இது வரை சுமார் 200 விசிட் விஸா வைத்திருப்பவர்கள், முக்கியமாக பெண்கள், குறித்த பிரிவால் சோதனையிடப்பட்டுள்ளனர்.

மோசமான கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் தவறான அதிகாரிகளிடையே அதிக அளவிலான ஊழல் காரணமாக மனித கடத்தல்காரர்கள் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை தவறாக பயன்படுத்துவதாகப் பல நாடுகளின் புகார்களைத் தொடர்ந்து இந்த சிறப்புப் பிரிவு அமைக்கப்பட்டது - என்றார்.

(அ)

# எம்.பிக்களின் வீட்டு வாடகை 30 வருடங்களாக ஆயிரம் ரூபா

கொழும்பு, ஓக. 28

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதிவெல குடியிருப்புத் தொகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு கடந்த 30 வருடகாலமாக மாத வாடகை 1000 ரூபா வசூலிக்கப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதன்படி, குறித்த குடியிருப்புகளுக்கான மாத வாடகை தொகையில் இதுவரை திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்திற்கமைய, மாதிவெல குடியிருப்புத் தொகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மாத வாடகையாக 1000 ரூபா அறவிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதவியை இழந்த பின்னர் உடனடியாக உத்தியோகபூர்வ குடியிருப்பில் இருந்து வெளியேற வேண்டுமெனவும், அவ்வாறு வெளியேறாத நிலையில் நாளொன்றுக்கு 500 ரூபா அறவிடப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 6 பாராளுமன்ற உறுப்பினர்கள் அபராதத் தொகையுடன் மின்சாரம் மற்றும் நீர் கட்டணம் உட்பட 455,904 ரூபாவை செலுத்தியிருக்கவேண்டுமென தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவி

வடமராட்சி, ஓக. 27

வடமராட்சி தொண்டமனாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தால் கல்விச் சுற்றுலா மற்றும் திருத்தல யாத்திரைக்கான நிதி உதவியாக ரூபா 100,000 நேற்று வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடம், சைவசித்தாந்தத்துறை மாணவர்களின் கல்விச்சுற்றுலா, மற்றும் திருத்தல யாத்திரைக்காகவே குறித்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந் நன்கொடையினை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கௌரவ கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத்தில் வைத்து பிரதிநிதிகளிடம் வழங்கினார். (அ-02)



# தங்கக் கடன் பெறுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 28

இலங்கையில் தங்கக் கடன் பெறுவோரின் தொகை அதிகரித்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்தார்.

இதன்படி, 2021 ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு இதுவரையான காலம் வரை தங்க நகைகளை அடமானம் வைத்து பெற்ற கடன் தொகை 600 பில்லியன் ரூபாவைக் கடந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த தொகையானது, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட தங்கக் கடனை விட அதிகமாகுமென பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் அவசர பணத் தேவைகளுக்கு மாத்திரம் தங்க நகைகளை அடமானம் வைக்கும் நிலை காணப்பட்டதாகவும், தற்போது அடிப்படைத் தேவைகளுக்காக தங்கக் கடன் பெறும் நிலை ஏற்பட்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து நாட்டில் தங்கக் கடன் பெறுவோரின் தொகை கணிசமாக அதிகரித்துள்ளது.

தங்கக் கடன் பெற்றவர்களினால் கடனை மீளச் செலுத்த முடியாத நிலையில் தங்க நகைகளை முழுமையாக இழக்கும் நிலைமையும் அதிகரித்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
28.08.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சீனக் கப்பல் விவகாரம்

சீனாவின் யுத்த மற்றும் உளவு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் தொலில்நுட்பத் திறன் கொண்ட கப்பலொன்று, விரைவில் இலங்கையில் நங்கூரமிடப்படலாம் என்னும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது. இந்த நிலையில் திட்டமிட்டவாறு குறித்த கப்பல் இலங்கைக்கு வருமென்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருக்கின்றார். இவ்வாறானதொரு சூழலில், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு விடயத்தில், இலங்கையின் நகர்வுகள் தொடர்பில், கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவரும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தனது கரிசனைகளை வெளியிட்டிருக்கின்றார். அதாவது, இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்காத விடயங்களை இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டும் – அவ்வாறு எடுக்கத் தவறும் பட்சத்தில் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடுமென்று அவர் தெரிவித்திருக்கின்றார்.

இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகக் கூறப்படும் நிலையில்தான், சீனாவின் யுத்த கப்பல் விவகாரம் சர்ச்சைக்குரியதாக நோக்கப்படுகின்றது. சீனாவின் உளவுக் கப்பல் யுவான்-5 (Yuan Wang 5) முன்னர் அம்பாந்தோட்டையில் நங்கூரமிடப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் இந்திய மற்றும் அமெரிக்க பாதுகாப்பு தரப்புக்கள் தங்களின் கரிசனையை வெளியிட்டிருந்தன. ராஜதந்திர அழுத்தங்களையும் பிரயோகித்திருந்தன. எனினும் பாதுகாப்பு உத்தரவாதத்தின் அடிப்படையில் அனுமதி வழங்கியதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்தியாவையும் அமெரிக்காவையும் அதே வேளை, சீனாவையும் சமநிலையில் கையாளும் உக்தியை தொடர்ந்தும் வெற்றிகரமாக கையாள முடியுமென்றே கொழும்பு கருதுவதாக தெரிகின்றது.

ஆனால் இது எந்தளவுக்கு சாத்தியமென்பதை காலம்தான் நிரூபிக்க முடியும். ஏனெனில் புவிசார் அரசியல் நகர்வுகள் தொடர்பில் எவரும் துல்லியமான கணிப்புக்களை வெளியிட முடியாது. அனைத்தும் ஊகங்களும் அனுமானங்களும்தான் ஆனால் முன்னைய அனுபத்திலிருந்து சிலவற்றை கணிக்க முடியும். இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கண்ணோட்டத்தில், இந்தியாவின் உடனடி அயல்நாட்டில், சீனாவின் இராணுவ ரீதியான தலையீடுகள் அதிகரிக்குமாயின், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு நிச்சயம் கேள்விக்குள்ளாகும். இதனை இந்தியாவினால் ஒரு கட்டத்திற்கு மேல் சகித்துக் கொண்டிருக்க முடியாது.

இந்த பின்புலத்தில், சித்தார்த்தன் எச்சரிக்கை கவனிப்புக்குரியது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் வெளிவிவகார அணுகுமுறையின் விளைவாகவே, இந்தியா சில கடுமையான நிலைப்பாடுகளை எடுக்க வேண்டியேற்பட்டது.

இன்றைய சூழலில், இலங்கையின் உள்நாட்டு அரசியல் சூழலும் சுமுகமாக இல்லை. குறிப்பாக கோட்டாபய ராஜபக்ஷவின் வெளியேற்றத்திற்கு பின்னர், உற்சாகமிழந்திருந்த சிங்கள – பௌத்த தேசியவாத தரப்புக்கள் மீளவும் அரங்கிற்கு வருகின்றன. இதற்கான ஆரம்பமாக 13ஆவது திருத்தச் சட்டத்தை கையிலெடுத்தவர்கள் – தற்போது, மதத்தை கையிலெடுத்திருக்கின்றனர்.

நிலைமைகளை உற்று நோக்கும்போது, மீண்டும் ஒரு அமைதியின்மையை ஏற்படுத்துவதற்கான சூழலும் தென்படுகின்றது. இவைகள் அனைத்தும் இலங்கையை உள்ளுக்குள் வலுவிழக்கச் செய்யும் விடயங்களே. ஒரு நாடு உள்ளுக்குள் வலுவிழக்கும் போதுதான், அந்த நாட்டுக்குள் வெளித்தரப்புக்கள் ஊடுருவதற்கான சூழல் உருவாகும். இலங்கையை பொறுத்தவரையில் வரலாற்று ரீதியாக, இந்தியாவிற்கு எதிரான வெளித்தரப்புக்களின் ஊடுருவல் தொடப்பான அச்சம் இந்திய மட்டத்திலிருந்திருக்கின்றது. முன்னைய உலக ஒழுங்கில் அது அமெரிக்காவின் தலையீடாக நோக்கப்பட்டது. தற்போது சீனாவின் தலையீடாக நோக்கப்படுகின்றது.

# போராட்டக்காரர்களுடன் இணைந்து புதிய கூட்டணி உருவாக்கும் ராஜித?

*கொழும்பு, ஒக. 28*

புதிய அரசியல் சக்தியொன்றை உருவாக்க பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தலைமையிலான குழுவொன்று முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.



பாராளுமன்றத்தில் சுயேச்சையாக இயங்கும் உறுப்பினர்களுடன் புதிய கூட்டணி தொடர்பிலான பேச்சுவார்த்தைகளை ராஜித சேனாரத்ன நடத்தி வருகிறார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தும் நோக்கில் இவ்வாறு புதிய கூட்டணியை உருவாக்க ராஜித சேனாரத்ன தலைமையிலான குழு ஆலோசித்து வருகிறது.

விரைவில் இது தொடர்பிலான முக்கிய அறிவிப்புகள் வெளியாகவுள்ளதாகவும், ராஜித சேனாரத்ன உருவாக்கும் இந்த புதிய குழுவில் கடந்த காலத்தில் காலிமுகத்திடல் போராட்டத்தில் கலந்துகொண்ட சில போராட்டக்காரர்களும் இணைந்துக்கொண்டுள்ள தாகவும் அறிய முடிகிறது.

ராஜித சேனாரத்ன, அரசாங்கத்துடன், இணைந்து சுகாதார அமைச்சுப் பதவியை பெற்றுக்கொள்ள உள்ளதாகவும் இதற்காக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாகவும் கடந்த காலங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

குறிப்பாக கடந்த வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவளித்து அவர் அரசாங்கத்துடன், இணைந்து கொள்வார் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராகவே ராஜித சேனாரத்ன வாக்களித்துடன், அவர் இதுவரை அரசாங்கத்தில் இணைந்துகொள்ளும் எவ்வித அறிவிப்புகளையும் பொதுவெளியில் வெளியிடவில்லை.

என்றாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயல்பாடுகளுக்கு அவர் தொடர்ச்சியாக வரவேற்பையே அளித்து வருகிறார். (அ)

# அதிசொகுசு வீடு வைத்திருப்பவர்களிடமிருந்து வருமான வரி வசூலிக்க அரசாங்கம் தீர்மானம்

*கொழும்பு, ஒக. 28*

கொழும்பு உள்ளிட்ட முக்கியமான நகரங்களில் தொடர்மாடி குடியிருப்புக்களில் அதிசொகுசு வீடுகளை வைத்திருப்பவர்களிடமிருந்து வருமான வரி வசூலிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, இது தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் டபிள்யூ.எச்.ஏ. விஜேசூரிய அண்மையில் வீட்டு வளாக நிர்வாக நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

அவரது கடிதத்தில், "நாடு தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு வரி வருமானம் மிகவும் முக்கியமானதாக உள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதனால் பிரதான நகரங்களில் வீடுகளை வாங்கி தற்போது அந்த வீடுகளில் வசிக்கும் அனைத்து நபர்களின் விவரங்களையும் சேகரிக்க வேண்டும்.

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 123(1) பிரிவின் கீழ் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க இந்த எழுத்துமூலக் கோரிக்கையானது சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி!

*கொழும்பு, ஒக. 28*

மின்னேரிய பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ரொட்டவெவ கல் லோயா பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நபர் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

தனிப்பட்ட குடும்பத் தகராறு காரணமாக மாமாவினால் மருமகன் மீது இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு இந்த துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளதுடன் காயமடைந்த நபர் மின்னேரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்ததாக பொலிஸார் கூறினர்.


ரொட்டவெவ, கல்லோயா பிர தேசத்தில் வசிக்கும் 27 வயதுடைய நபரே உயிரிழந் துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன்படுத்தப் பட்டதாக சந்தேகிக்கப்படும் துப்பாக்கியுடன் 73 வயதுடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் ஹிங்குரக்கொட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மின்னேரிய பொலிஸார் மேற்கொண் டுள்ளனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஓகஸ்ட் - 28 திங்கட்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆவணி 11**
**நல்ல நேரம் : 06.00 - 07.30**
**ராகு காலம் : 07.30 - 09.00**
**திதி : திதித்துவயம்**




**மேடம்**
கணவன் – மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். இழந்த உரிமையை பெறுவீர்கள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டி இருக்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப் புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அமோகமான நாள்.

**சிம்மம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் புதிய சலுகைகள்கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள் எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். போட்டிகளை எதிர் கொண்டு வெற்றி காண்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். முழங்கால் வலி வந்து நீங்கும். ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். இடம் பொருள்ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். சக ஊழியர்களால் பிரச்னைகள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பாக நாள்.

**மீனம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையைமாற்றுவீர்கள். நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும்.

# மத்திய அரசு மீது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஊழல் குற்றச்சாட்டு

திருவாரூர், ஓக. 28

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மயிலாடுதுறை, நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். நேற்று ஞாயிற்றுக்கிழமை திருவாரூரில் நாகை எம்.பி. செல்வராஜ் இல்லத் திருமண விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார்.

விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:-

இந்தியா என்ற கூட்டணி உருவாவதற்கு தமிழ்நாட்டில் உள்ள தி.மு.க. கூட்டணி காரணமாக இருக்கிறதே என்ற ஆத்திரம் பிரதமர் மோடிக்கு வந்துள்ளது. அதனால்தான் எங்கே போனாலும் அது சுதந்திர தின நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, கொடியேற்று நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, பல மாநிலங்களுக்கு சென்று அங்கு நடைபெறும் அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, எங்கே போனாலும் நாம் அமைத்துள்ள இந்தியா கூட்டணி பற்றி விமர்சனம் செய்து பேசி கொண்டிருக்கிறார். கொச்சைப்படுத்தி பேசுகிறார். அதுவும் குறிப்பாக தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய நம்முடைய தி.மு.க. பற்றி அவரால் பேசாமல் இருக்க முடியவில்லை. மோடி என்ன பேசுகிறார் தமிழ்நாட்டில் ஊழல் வந்து விட்டதாம். 9 வருடமாக சொல்லிக் கொண்டிருக்கிறார். அந்த ஊழலை ஒழித்தே தீருவேன். இந்தியாவில் இருக்கக் கூடிய ஊழலை ஒழித்தே தீருவேன் என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார். நான் பிரதமர் மோடியை பார்த்து அடக்கத்துடன் கேட்க விரும்புவது ஊழல் பற்றி பேசுவதற்கு யோக்கியதை பிரதமராக இருக்கக் கூடிய மோடிக்கு உண்டா? உங்களுடைய வண்டவாளம் எல்லாம் இப்போது வெளியே வந்து விட்டதே. ஊழலை பற்றி பி.ஜே.பி. பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது. சி.ஏ.ஜி. அறிக்கை இன்று என்ன சொல்கிறது? மத்திய அரசுக்கு கட்டுப்பட்டுள்ள அமைப்பு இது. ஒவ்வொரு வருடமும், அந்தஅரசின் நிலையைப் பற்றி அரசு செய்துள்ள செலவு பற்றி அதையெல்லாம் ஆய்வு செய்து அதற்கு ஒப்பீடு கொடுப்பார்கள். அது தான் சி.ஏ.ஜி.யின் வேலை. ஒன்றியத்தில் நடைபெறும் பா.ஜ.க. ஆட்சி ஊழல் ஆட்சி. முறைகேடுகள் அதிகம் கொண்ட ஆட்சி. லஞ்ச லாவண்யம் பெருத்துப் போன ஆட்சி என்று சொல்கிறது. நாங்கள் சொல்லவில்லை. இப்போது சி.ஏ.ஜி. சொல்கிறது-என்றார். (அ)

# ஊழலை மறைக்க நடத்தும் வார்த்தை ஜாலம் எடுபடாது

## மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டுக்கு பா.ஜனதா பதிலடி

சென்னை, ஓக. 28

மத்திய அரசின் 7 திட்டங்களில் ஊழல் நடந்துள்ளது. பிரதமர் மோடிக்கு ஊழல் பற்றி பேச எந்த தகுதியும் இல்லை. ஊழலை மறைக்கவே பா.ஜனதா மதவாதத்தை கையில் எடுக்கிறது என்று மு.க.ஸ்டாலின் பரபரப்பு குற்றச்சாட்டை கூறினார். இதற்கு பா.ஜனதா உடனடியாக பதிலடி கொடுத்தது. இதுதொடர்பாக தமிழக பா.ஜனதா துணை தலைவர் கரு.நாகராஜன் கூறியதாவது:-

ஊழலை பற்றி பேச பிரதமர் மோடிக்கு தகுதி இல்லை என்று எந்த தகுதியின் அடிப்படையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசி இருக்கிறார் என்பது புரியவில்லை. ஊழலால் இந்தியாவில் காங்கிரஸ் அரசால் கலைக்கப்பட்ட அரசு தி.மு.க. அரசு. ஊழலுக்காக ஆ.ராசா, கனிமொழியை சிறையில் தள்ளிய அரசு காங்கிரஸ் அரசு. டி.ஆர்.பாலு செய்த ஊழல் காரணமாக 2ஆவது முறை காங்கிரஸ் அரசில் மந்திரி பதவி வழங்க மறுக்கப்பட்டது. ஊழல் வழக்கில் அமைச்சர் செந்தில் பாலாஜி சிறையில் இருப்பதை தாங்கி கொள்ள முடியவில்லை. 2ஜி வழக்கு இன்று முதல் மீண்டும் விசாரணைக்கு வருகிறது. அதை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஊழல் செய்யாத உத்தமர் வேஷம் போடும் தி.மு.க. 30 ஆயிரம் கோடியை குவித்து வைத்தது பற்றி அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் கூறிய குற்றச்சாட்டுக்கு பதில் சொல்லட்டும். அமைச்சர்கள் பொன்முடி, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு மீது நீதிமன்றமே தாமாக முன்வந்து மீண்டும் ஊழல் வழக்கை விசாரிக்கிறதே அது பற்றி பதில் சொல்லட்டும். நோபுள் ஸ்டீல் கம்பனியில் ரூ.1000 கோடி பணம் குவித்தது, மு.க.ஸ்டாலின் துணை முதலமைச்சராக இருந்த போது மெட்ரோ ரெயில் திட்டத்தில் நடத்திய ஊழலுக்கு பதில் சொல்லட்டும். இதற்கெல்லாம் பதில் சொல்லி தனது தகுதியை மக்கள் மத்தியில் நிரூபித்து விட்டு ஊழலுக்கு எதிராக போராடும் பிரதமர் மோடியை பற்றி பேசினால் நல்லது. மத்திய அரசின் 7 திட்டங்களில் ஊழல் நடந்து இருக்கிறது என்று வார்த்தை ஜாலம் காட்டி இருக்கிறார். பொதுவாக மத்திய அரசின் திட்டங்களும் மாநில அரசு மூலமாகத்தான் நிறைவேற்றப்படும் என்பதாவது முதலமைச்சருக்கு நினைவில் இருக்க வேண்டும். சி.ஏ.ஜி. என்பது என்ன? ஊழல் பற்றி சொல்வதல்ல. திட்டங்களில் தவறு நடந்திருப்பதை அரசுக்கு சுட்டிக் காட்டுவதுதான். ஆயுஷ்மான் பாரத் மருத்துவ திட்டத்தில் 3 ஆயிரத்து 700 லட்சம் பயனாளிகள் பலன் அடைந்து வருகிறார்கள். அதில் போலியாக உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்பதை சுட்டிக் காட்டி உள்ளது. இந்த தவறுகள் சரி செய்யக்கூடியது தான். பல ஆயிரம் கோடி வருவாய் வரும் சுங்கச்சாவடிகளில் வருமானம் குறைத்து காட்டப்படுவதாக அரசின் கவனத்துக்கு வந்ததால்தான் பல்வேறு சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. ‘பாஸ்டேக்’ மூலம் பணம் செலுத்தும் முறை கொண்டு வரப்பட்டது. இந்த மாதிரி நடைபெறும் தவறுகளை சி.ஏ.ஜி. பரிந்துரைப்படி அரசு சீர் செய்கிறது. தமிழகத்தில் 100 நாள் வேலை திட்டத்தில் பல லட்சம் போலி நபர்களை காட்டி கோடி கணக்கில் சுருட்டினார்கள். அந்த தவறையும் சி.ஏ.ஜி. தான் சுட்டிக்காட்டியது. அதன் பிறகு ‘ஸ்மார்ட் கார்ட்’ திட்டம் கொண்டு வரப்பட்டு தவறுகள் களையப்பட்டன-என்றார். (அ)

**புழல் சிறையில் பெரும் பரபரப்பு!**

# துணை ஜெயிலர் மீது வெளிநாட்டு கைதி தாக்குதல்

செங்குன்றம், ஓக. 28

புழல் தண்டனை சிறையில் 800 இற்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர். கடந்த வாரம் ஒரு அறையில் இருந்த வெளிநாட்டு கைதிகள் 4 பேர் செல்போன் பயன்படுத்தி வந்தது அதிகாரிகள் சோதனையில் தெரிந்தது. இதையடுத்து செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டு வெளிநாட்டு கைதிகள் வெவ்வேறு அறைக்கு மாற்றப்பட்டு வருகின்றனர்.

நேற்று முன் தினம் இரவு நைஜீரியா நாட்டை சேர்ந்த போதைப் பொருள் வழக்கில் தண்டனை பெற்று வரும் இஜிபா அகஸ்டின் சிபிக்கி (வயது-41) என்பவர் வேறு அறைக்கு மாற்றப்பட்டார். அப்போது அவ்வழியாக சிறை துணை ஜெயிலர் சாந்தகுமார் நடந்து வந்து கொண்டு இருந்தார். அவரிடம் கைதி இஜிபா அகஸ்டின் சிபிக்கி வேறு அறைக்கு மாற்றுவது தொடர்பாக கடும் வாக்குவாதம் செய்தார். மேலும் அவரை தாக்கி சாப்பாட்டு தட்டை வீசினார். இதில் துணை ஜெயிலர் சாந்தகுமாருக்கு கையில் காயம் ஏற்பட்டது. அவருக்கு சிறையில் உள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இது குறித்து புழல் பொலிஸில் புகார் செய்யப்பட்டது. இன்ஸ்பெக்டர் சண்முகம் நைஜீரியா நாட்டு கைதி இஜிபா அகஸ்டின் சிபிக்கி மீது வழக்கு பதிவு செய்து மேலும் விசாரணை நடத்தி வருகிறார். புழல் சிறையில் துணை ஜெயிலர் மீது வெளிநாட்டு கைதி தாக்குதல் நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

(அ)

# ஐ.எஸ். அமைப்பினர் ஊடுருவியுள்ளனரா?

**தீர விசாரித்து, நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி, பொலிஸ் மா அதிபருக்கு உலமா சபை கடிதம்**

கொழும்பு, ஓக. 28

**ஐ.எஸ். அமைப்பினர் நாட்டிற்குள் ஊடுருவியுள்ளனரா என்பது தொடர்பில் தீர விசாரணைகளை மேற்கொண்டு நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அமைப்பு ஜனாதிபதி மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

**இது தொடர்பில் அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளது.**

**அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:**

இலங்கையில் 2019 ஆம் ஆண்டு பயங்கரவாத தாக்குதலை மேற்கொண்ட ஐ.எஸ் அமைப்பினர் மீண்டும் நாட்டிற்குள் ஊடுருவியுள்ளனரா என்பது பற்றி துரித விசாரணைகளை மேற்கொண்டு நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறு, பொலிஸ் மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்னவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவினால் கடந்த வியாழக்கிழமை கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

கடந்த புதன் கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஒழுங்குகள் தொடர்பிலான விவாதத்தின் போது எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜேசிறி ஐ.எஸ் அமைப்பில் பயிற்சிகள் பெற்ற 25 பேர் நாட்டுக்குள் இருக்கிறார்களா என்கின்ற விடயம் தொடர்பில் கேள்வியெழுப்பியிருந்தார். இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இவ்விடயம் தொடர்பில் ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையிலேயே அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவினால் குறித்த கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

மேற்படி பாராளுமன்ற அமர்வில் நிகழ்த்தப்பட்ட உரையின் உண்மைத்தன்மை பற்றி முழுமையான விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் கடந்த காலங்களைப்போன்று உரிய தகவல் கிடைத்தும் உடனடி நடவடிக்கைகள் எடுக்காமையினால் ஏற்பட்ட விபரீதங்கள் பற்றியும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் நாட்டின் பாதுகாப்பினை உறுதிசெய்யுமாறு இக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## அக்கரப்பத்தனையில் தீ விபத்து!



கொழும்பு, ஓக. 28

நுவரெலியா, அக்கரப்பத்தனை, கிளாஸ்கோ மேற்பிரிவு தோட்டத்தில் உள்ள நெடுங்குடியிருப்பு தொகுதியில் நேற்று முன் தினம் இரவு தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இத்தீவிபத்தால் லயன் அறையொன்று முற்றாக எரிந்துள்ளது. உடமைகளும் தீக்கிரையாகியுள்ளன.

மக்கள் இணைந்து தீயை கட்டுக்குள் கொண்டுவந்ததால் ஏனைய லயன் அறைகளுக்கு தீபரவவில்லை.

குறித்த நெடுங் குடியிருப்பு தொகுதியில் 22 குடும்பங்கள் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தீ விபத்து தொடர்பான விசாரணையை அக்கரப்பத்தனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## பிரமிட் திட்டங்களை நடத்தும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஓக. 28

குற்றவியல் சட்ட விதிகளின் கீழ் பிரமிட் திட்டங்களை நடத்தும் நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த வார ஆரம்பத்தில், இலங்கை மத்திய வங்கி பல்வேறு பெயர்களில் ஊக்குவிக்கப்படும் பிரமிட் திட்டங்களில் பங்கேற்க வேண்டாம் என்று பொதுமக்களை எச்சரித்தது.

அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஏழு நிறுவனங்களின் பட்டியலையும் மத்திய வங்கி பெயரிட்டுள்ளது. (அ)

## இரு பஸ்கள் மோதி விபத்து; 13 பேர் வைத்தியசாலையில்

கொழும்பு, ஓக. 28

கொழும்பு - கண்டி வீதியின் கம்புராதெனிய பகுதியில் இரு தனியார் பஸ்கள் ஒன்றுடனொன்று மோதிய விபத்தில் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ்ஸொன்று அதே திசையில் பயணித்த பஸ் பின்பக்கத்தில் மோதியுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் வரக்காபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் நால்வர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் கேகாலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் மூவர் பெண்களாவர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்கோவிட்ட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## மற்றுமொரு நுண்ணுயிர் கொல்லி மருந்திற்கு தடை

கொழும்பு, ஓக. 28

கோ-அமொக்ஸிக்ளேவ் (Co-amoxiclav) எனப்படும் நுண்ணுயிர் கொல்லி மருந்தின் பயன்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர் ஒருவர், குறித்த நுண்ணுயிர் கொல்லி மருந்து செலுத்தியதை தொடர்ந்து உயிரிழந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வெட்டுக் காயத்திற்கு சிகிச்சை பெறுவதற்காக வரக்காபொலயிலிருந்து வந்த 50 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த 21000 தடுப்பூசிகளை கொண்ட மருந்து தொகுதியிலிருந்து 18000 தடுப்பூசிகள் இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவற்றில் ஒரு தடுப்பூசி தொடர்பில் மாத்திரமே இந்நிலை பதிவாகியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு மூலமாகவும் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. (அ)

## ஆறுதல் திட்டத்தில் முதற்கட்டமாக இன்று 8 இலட்சம் குடும்பங்களுக்கு கொடுப்பனவு!

கொழும்பு, ஓக. 28

முதற்கட்டமாக 800,000 குடும்பங்களுக்கான நலன்புரி கொடுப்பனவுகளை வழங்குவதற்காக ஆறுதல் (அஸ்வெசும) நிதியை அந்தந்த வங்கிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.



நலத்திட்ட உதவிகளுக்காக விண்ணப்பித்த 2 மில்லியன் பயனாளிகளில் 1.5 மில்லியன் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தகவல் சரியாக உறுதிப்படுத்தப்பட்ட 800,000 பயனாளிகளின் கணக்குகளில் ஜூலை மாதத்திற்கான பணம் நாளை(இன்று) வரவு வைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

"தகுதியுள்ள பயனாளிகள் செவ்வாய் அல்லது புதன்கிழமைக்குள் அந்தந்த வங்கிகளில் இருந்து பணத்தை எடுக்கலாம்" என்று அவர் கூறினார்.

மற்ற பயனாளிகளின் விண்ணப்பங்களில் உள்ள தகவல்களை சரிபார்த்த பிறகு அவர்களுக்கு உடனடியாக பணம் வழங்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

"நலன்புரி நன்மைகள் சபை இதுவரை ஒரு மில்லியன் முறையீடுகளையும் 120,000 ஆட்சேபனைகளையும் பெற்றுள்ளது. மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான கணக்கெடுப்பு தற்போது தொடங்கியுள்ளது, அது முடிந்தவுடன் அனைத்து பயனாளிகளுக்கும் விரைவில் பணம் வழங்கப்படும்," என்றார் அமைச்சர்.

தவறான தகவல் அளித்து பயனாளிகள் யாரேனும் பயன் பெற்றிருந்தால், சரிபார்த்த பின், பணத்தை மீட்டு, அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார். (அ)

## இந்தியாவின் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கக்கூடாது

**அரசிடம் கோருகிறார் சித்தார்த்தன்**

யாழ்ப்பாணம், ஓக.

இந்தியாவின் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்காத விடயங்களை இலங்கை அரசாங்கம் எடுக்கவேண்டும், அவ்வாறு எடுக்க தவறும்பட்சத்தில் மிக மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என தமிழக மக்கள் விடுதலை கழகத்தின் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தாளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு ஆபத்தான நிலையில் இலங்கை போய்க் கொண்டிருக்கின்றது. ஏனென்றால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு அதே போன்று இலங்கை சீனாவுடன் வைத்திருக்கின்ற உறவு நிலைமைகளை மோசமாக்கியுள்ளது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் மிக கவனமாக கையாள வேண்டும் சீனாவின் உடைய ஆதிக்கம் இங்கு அதிகரிக்குமானால் நாட்டில் இருக்கின்ற மக்களை அது பெரிய அளவில் பாதிக்கும்.

இந்த நிலையில், இந்தியாவிடம் இருந்து கிடைக்கும் பாதுகாப்பிற்கு அச்சத்தை வழங்கும் விதமாகவே சர்ச்சைக்குரிய சீன ஆய்வுக் கப்பல் நாட்டிற்கு வருகைத் தரவுள்ளது-என்றார் (அ)

# நெதர்லாந்தின் கலாசார, ஊடக விவகார இராஜாங்கச் செயலர் இலங்கை வருகை

## ஆறு கலைப்பொருட்களின் உரித்தை கைமாற்றும் ஆவணத்தில் கையெழுத்து

கொழும்பு, ஓக. 28

நெதர்லாந்தின் கலாசார மற்றும் ஊடக விவகார இராஜாங்க செயலாளர் குனே உஸ்லு தலைமையிலான கலாசார பிரதிநிதிகள் குழு நேற்று ஞாயிற்றுக்கிழமை நாட்டை வந்தடைந்துள்ளது.

கலாசார முக்கியத்துவம் வாய்ந்த 6 கலைப்பொருட்களின் உரித்தை இலங்கைக்குக் கைமாற்றுவதற்கான சட்ட ஆவணத்தில் கையெழுத்திடுவதே இராஜாங்கச் செயலாளர் குனே உஸ்லுவின் இலங்கைக்கான விஜயத்தின் பிரதான நோக்கமாகும்.

இலங்கை, பிரிட்டன், அமெரிக்கா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்களை உள்ளடக்கிய குழுவினால் கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட சர்வதேச ஆதார பூர்வ கூட்டு ஆய்வின்போது நெதர்லாந்தின் தலைநகர் அம்ஸ்டர்டமில் அமைந்துள்ள ரிஜ்க்ஸ் அருங்காட்சியகத்தில் உள்ள தங்கக் கத்தி, துவக்கு உள்ளிட்ட 6 கலைப்பொருட்கள் இலங்கைக்குரியவை என்று கண்டறியப்பட்டது.

அவ்வாறு கண்டறியப்பட்ட கலைப்பொருட்கள் இவ்வாண்டின் இறுதியில் மீண்டும் இலங்கையிடம் கையளிக்கப்படவுள்ள நிலையில், அப்பொருட்களின் சட்டபூர்வ உரித்தை இலங்கைக்குக் கைமாற்றுவதற்கான ஆவணத்தில் நெதர்லாந்தின் கலாசார மற்றும் ஊடக விவகார இராஜாங்க செயலாளர் குனே உஸ்லு இன்று கைச்சாத்திடவுள்ளார். இந்நிகழ்வு புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சில் நடைபெறவுள்ளது.

அதேவேளை எதிர்வரும் 31ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பதற்கு திட்டமிட்டுள்ள இராஜாங்கச் செயலாளர் குனே உஸ்லு தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர், இக்காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளனர்.

அதுமாத்திரமன்றி நாளை செவ்வாய்க்கிழமை இலங்கை தேசிய ஆவணக் காப்பகத்தின் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்விலும் குனே உஸ்லு சிறப்புரை ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்படாது!

கொழும்பு, ஓக. 28

நாட்டில் இந்த மாதம் மீண்டும் கியூ.ஆர் குறியீட்டின் அடிப்படையிலான வாராந்த எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்படும் என எரிசக்தி மற்றும் எரிபொருள் அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்தார். ஆனால் இது நடைமுறைக்கு வரவில்லை.

இது தொடர்பாக எரிசக்தி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்-

இம்மாதம் ஒதுக்கீடு அதிகரிக்கப்படமாட்டாது. முன்னதாக ஒதுக்கத்தை அதிகரிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதும், இலங்கையில் சீராக எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்வதில் ஏற்பட்டுள்ள சவால்களால் அந்த தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அடுத்த மாதம் முதல் கியூ.ஆர். முறைமையை நீக்குவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் இருப்பினும் அது குறித்த முடிவு எதனையும் இன்னும் எடுக்கவில்லை-என்றார்.

# மீளக் கையளிக்கப்படாத 700 துப்பாக்கிகள் எங்கே?

கொழும்பு, ஓக. 28

1980 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்ட 700 துப்பாக்கிகள் மீளக் கொடுக்கப்படவில்லை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த 10 வருட காலப்பகுதியில் 154 அரசியல்வாதிகளுக்கு 698 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில், அரசியல்வாதிகளின் பட்டியலும், அவர்கள் திரும்பிச் செல்லத் தவறிய ஆயுதங்களின் விவரங்களும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோனினால் இந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த ஆவணங்களின்படி, துப்பாக்கிகள் பெரும்பாலும் 9 எம்.எம். பிஸ்டல்கள், ரிவோல்வர்கள் மற்றும் 12 போர் சொட்கன்கள். சில அரசியல்வாதிகளுக்கு அந்தந்த கட்சிகள் உட்பட பல்வேறு சந்தர்ப்பங்களில் பல துப்பாக்கிகள் வழங்கப்பட்டன. தங்களுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளை திருப்பிக் கொடுக்கத் தவறிய சிலர் தற்போது உயிரிழந்துள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் இது குறித்து பாராளுமன்றத்தில் தெரிவித்ததாவது:

இந்த துப்பாக்கிகள் எதற்காக வழங்கப்பட்டன என்பதை குறிப்பிடுவதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் எந்த ஆவணங்களும் இல்லை. ஆனால் 1980-1990 காலப்பகுதியில் நாட்டில் நிலவிய சூழ்நிலையின் காரணமாக இது அரசியல்வாதிகளின் பாதுகாப்பிற்காக இருக்கலாம்-என்றார்.

டலஸ் அழகப்பெரும எழுப்பிய மற்றுமொரு கேள்விக்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர், 1990 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு அமைச்சு எந்த தானியங்கி துப்பாக்கிகளையும் வழங்கவில்லை என்று கூறினார். (அ)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று ஒரே தடவையில் 3 குழந்தைகள் பிரசவித்த தாய்!





யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நேற்று தாய் ஒருவருக்கு ஒரே தடவையில் மூன்று குழந்தைகள் சுகப்பிரசவத்தில் பிறந்துள்ளன.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் மகப்பேற்று விசேட வைத்திய நிபுணர் அப்புத்துரை சிறிதரன் தலைமையிலான மருத்துவக் குழுவினரே இந்த தாய்க்கு பிரசவம் பார்த்துள்ளனர்.

இதனையடுத்து, மூன்று குழந்தைகளும் தாயும் நலமாக உள்ளனர் என வைத்தியர்கள் தெரிவித்தனர். (அ)

# காலி சிறைச்சாலை கைதிகளுக்கு பரவிய மூளைக்காய்ச்சல் வெளியிலும் பரவியதா?

கொழும்பு, ஓக. 28

காலி சிறைச்சாலையில் பதிவாகியிருந்த உயிர்க்கொல்லி மூளைக்காய்ச்சல் நோய் வெளி சமூகத்திற்கும் பரவியதா என்ற சந்தேகம், கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற சிசு மரணம் தொடர்பான பிரேத பரிசோதனையின்போது எழுந்துள்ளது.

காலி, தலபிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 8 மாத பெண் குழந்தை கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் கடந்த 25 ஆம் திகதி உயிரிழந்துள்ளது.

இந்த மரணம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட காலி மாநகர மரண விசாரணை அதிகாரி சந்திரசேன லொக்குகே தெரிவிக்கையில், பாக்டீரியாவால் ஏற்படும் மெனிங்கோகோகல் நோயால் மரணம் ஏற்பட்டது என தீர்ப்பளித்தார்.

இந்த தொற்றினால் காலி சிறைச்சாலையில் இருவர் உயிரிழந்திருந்தனர்.

அத்துடன், பிரேத பரிசோதனையை மேற்கொண்ட சிரேஷ்ட சட்ட வைத்திய அதிகாரி யு.ஜி.பி. ஜயரத்ன, உயிரிழந்த சிறுமியின் சடலம் தொடர்பான இறுதிக் கிரியைகளை விரைவில் மேற்கொண்டு, அவர்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் இருந்தால் கூடிய விரைவில் பெற்றோர், உறவினர்கள் உள்ளிட்ட குடும்பத்தினரை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு உயிரிழந்த சிறுமியின் உறவினர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (அ)

# கடும் வறட்சியால் மீன்கள் உயிரிழப்பு!

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஓக. 28

கடும் வறட்சி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஆனையிறவு களப்பு பகுதியில் ஆயிரக்கணக்கான மீன்கள் இறந்துள்ளன.

இதனால் மீன் இனங்கள் அழிந்து வரும் நிலை அப்பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அண்மைக்காலமாக நாட்டில் அதிக வெப்பத்தினால் வறட்சி ஏற்பட்டு, அதனால் பல இழப்புகள் இடம்பெறுவதோடு பல வேறு பிரச்னைகள் எழுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# பால் பண்ணையாளர்களுக்கு வறட்சியால் நெருக்கடி நிலை!

கொழும்பு, ஓக. 28

இலங்கையில் தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் பால் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடுமையான வெப்பம் காரணமாக கால்நடைகளுக்குத் தேவையான மேய்ச்சல் நிலங்கள் வறண்டுள்ளன.

எதிர்வரும் வாரங்களில் வறட்சி மோசமடையும் நிலையில் திரவ பால் உற்பத்தி ஐம்பது வீதம் வரை குறைவடையுமென பால் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் சராசரி பால் உற்பத்தி 1,250 மில்லியன் லீற்றரைக் கடந்துள்ள நிலையில், இதில் 18 வீதத்திற்கும் அதிகமான பங்களிப்பை வட மேல் மாகாணம் செய்து வருகிறது.

கடந்த ஜூலை மாதம் வட மேல் மாகாணத்தின் திரவபால் உற்பத்தியானது 156,000 லீற்றராக பதிவாகியுள்ள போதும், எதிர்வரும் வாரங்களில் வறட்சி நிலை மேலும் மோசமடைந்தால் திரவ பால் உற்பத்தி குறைவடையுமென பால் பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடமேல் மாகாணத்தில் சுமார் 30 ஆயிரம் கால்நடை பண்ணைகள் காணப்படுகின்றன.

குறித்த பண்ணைகளில் சுமார் 25 ஆயிரம் கால்நடைகள் தற்போது பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேய்ச்சல் நிலங்கள் வறட்சியடைந்துள்ளதாக கால்நடைகளுக்கு போதுமான புள் கிடைக்கவில்லை என கால்நடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், வறட்சி காரணமாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலுள்ள நீர் நிலைகள், குளங்கள் வற்றியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# முட்டை இறக்குமதி தொடர்ந்து நடக்கும்

கொழும்பு, ஓக. 28

அடுத்த மூன்று மாதங்களுக்கு முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு ஏற்கனவே அனுமதி கிடைத்துள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

அதன்படி முட்டை இறக்குமதி தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென அவர் கூறினார்.

முட்டை இறக்குமதி மூலம் சந்தையில் முட்டை தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்த முடியும் எனவு அவர் தெரிவித்தார்.

அதன்படி, நாளாந்தத் தேவையான ஒரு மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்ய அரச வர்த்தக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அதன் தலைவர் ஆசிரி வலிசுந்தர குறிப்பிட்டார். (அ)

# சுற்றுச்சூழல் குறித்து 1,690 முறைப்பாடுகள்

## 79 வீதமானவைக்கு தீர்வு

கொழும்பு, ஓக. 28

மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு கடந்த 7 மாதங்களில் 1,690 சுற்றுச்சூழல் முறைப்பாடுகள் 79 வீதமானவைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழல் பிரச்னைகள் தொடர்பில் கடந்த ஏழு மாதக் காலப்பகுதிக்குள் 1,690 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அவற்றில் 79 வீதமான முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஜயசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த முறைப்பாடுகளில் தொழில் ரீதியான முறைப்பாடுகளே அதிகளவில் பதிவாகியுள்ளன. அவற்றில் மரக் கொட்டில், தச்சுத் தொழில் மற்றும் வாகனம் பழுதுபார்த்தல் போன்ற தொழில்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசு தொடர்பான முறைப்பாடுகளே அதிகளவில் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேலும், சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கும் வகையில் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களை எரித்தல், காடுகளை அழித்தல், அகழ்வாராய்ச்சிகள் மற்றும் ஒலி மாசடைவு போன்ற முறைப்பாடுகளும் கிடைக்கபெற்றிருக்கின்றன.

இதேவேளை, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1981 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும், இணையத்தளத்திற்கும் தினமும் ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற வண்ணமே உள்ளன.

தனது அதிகாரசபைக்கு நேரடியாக தொடர்பில்லாத முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களே தீர்வுகளை வழங்குமாறும், தனது அதிகாரத்துடன் நேரடியாக தொடர்புடைய முறைப்பாடுகள் மாத்திரமே மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் ஆராயப்பட்டு தீர்க்கப்படும்- என்றார். (அ)

# இவ்வாண்டு 40 வீதத்தால் அதிகரித்தது காடழிப்பு!

கொழும்பு, ஓக. 28

இவ்வாண்டில் தற்போது வரையில் 123 காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 40 வீதம் அதிகம் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அதன்படி, தற்போது நிலவும் வறண்ட காலநிலை காரணமாக வேண்டுமென்றே அல்லது கவனக்குறைவான மனித நடவடிக்கைகளினால் காட்டுத் தீ சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், இவ்வாறான காடழிப்பை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அனைவரும் அதிக கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர் கூறினார்.

காடழிப்புச் செயற்பாடுகள் மழையைத் தரும் என்ற மூட நம்பிக்கையின் காரணமாக கிராமங்களில் உள்ள சிலர் காடுகளுக்கு தீ வைப்பதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

பாதுகாப்புப் படையினர், பொலிஸார், தீயணைப்புப் படை மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதிநிதிகளுடன் இணைந்து காட்டுத் தீயை விரைவாகக் கட்டுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மலையேறுபவர்கள், முகாமிடுபடுபவர்கள், வேட்டையாடுபவர்கள் மற்றும் மூடநம்பிக்கை கொண்டவர்களே இது தொடர்பான மிகப் பெரிய குற்றவாளிகள் என்று சந்தேகிக்கப்படுகிறது.

ஆகவே, பொலிஸார் மற்றும் வனவிலங்கு துறை போன்ற பிற அரசு நிறுவனங்களும் பாதுகாப்புப் படையினரும் இணைந்து எதிர்காலத்தில் ஏற்படும் காட்டுத் தீயை முறியடிக்க வேண்டும்.

பாதுகாப்புப் படையினர், தீயணைப்புப் படைகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களம் ஆகியன கடந்த சில நாட்களாக காட்டுத் தீயை அடக்குவதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் , வனவிலங்கு திணைக்களம், வன பாதுகாப்பு திணைக்களம், பெருந்தோட்டகைத்தொழில் மற்றும் துறை முக அதிகாரசபை ஆகியவற்றிற்கு பல கண்காணிப்பு நடவடிக்கைகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக அதிக உணர்திறன் நிறைந்த பகுதிகளில் இந்த நிலைமையை கட்டுப்படுத்த திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பன இந்த நோக்கத்திற்காக ஆதரவு வழங்குவது என்பது பற்றி விவாதிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படை பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்த நிலைமை குறித்து அரசாங்க தோட்ட கண்காணிப்பாளர்களுக்கும் விளக்கமளிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் தங்கள் பிராந்தியங்களில் காட்டுத் தீயைத் தடுக்க அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும் - என்றார். (அ)

# நுரைச்சோலையில் பெண்ணின் சடலம்!

கொழும்பு, ஓக. 28

நுரைச்சோலை - சேனபொல களப்பிற்கு அருகிலிருந்து கொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட குறித்த பெண்ணின் நெற்றி மற்றும் கைகளில் வெட்டுக் காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் காணப்பட்ட இடத்திலிருந்து குறித்த பெண்ணின் கையடக்கத் தொலைபேசி கைப்பற்றப்பட்டுள்ளதை அடுத்து, பொலிஸாரால் மேலதிக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நுரைச்சோலை - நாரக்களிய பகுதியைச் சேர்ந்த 53 வயதான பெண்ணொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (அ)

# மோட்டார் சைக்கிள்கள் களவாடிய உயர்தர மாணவர்கள் இருவர் கைது!

கொழும்பு, ஓக. 28

மோட்டார் சைக்கிள்கள் களவாடி அதனை விற்பனை செய்த உயர்தர மாணவர்கள் இரண்டு பேர் கெக்கிராவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இரண்டு பேரும், நீண்ட காலமாக இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் கெக்கிராவ நீதிவான் முன்னிலையில் ஆஜராக்கப்பட்டதை, அடுத்த மாதம் 9ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

# அரச வங்கியின் கோரிக்கையை நிராகரித்த ஜனாதிபதி செயலகம்!

கொழும்பு, ஓக. 28

மாதம் ஒன்றுக்கு 2,200 அமெரிக்க டொலர் செலவில் அதிகாரி ஒருவரை கட்டாருக்கு அனுப்புவதற்கு, அரச வங்கி ஒன்று விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி செயலகம் நிராகரித்துள்ளது.

அரச வங்கியொன்றின் பிரதி முகாமையாளரை இரண்டு வருட காலத்திற்கு கட்டாருக்கு கடமை விடுப்பில் அனுப்புமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையே, ஜனாதிபதி செயலகத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த அதிகாரியை ஒரு மாதத்துக்கு கட்டாரில் தங்க வைப்பதற்கான வங்கியின் செலவினம் சுமார் 7 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது இரண்டு வருட காலப் பகுதியில் 17 மில்லியன் ரூபாவாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த கோரிக்கையை ஜனாதிபதி செயலகம் நிராகரித்துள்ளது.

# காணாமல்போன 3 சிறிய பிக்குகளும் நுவரெலியாவில் பெண்ணுடன் மீட்பு!

கொழும்பு, ஓக. 28

மினுவாங்கொடை பொரலுவத்தை பகுதியில் உள்ள பௌத்த மடாலயத்தில் இருந்து காணாமல்போன மூன்று சிறிய பிக்குகளை நுவரெலியா பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த 24 ஆம் திகதி முதல் மெஹேனி மடத்தில் தங்கியிருந்த 12, 15 மற்றும் 18 வயதுடைய இந்த மூன்று பிக்குகளும், 32 வயதுடைய பெண் ஒருவருடன் காணாமல் போயுள்ளதாக மினுவாங்கொடை பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சந்தேகத்திற்குரிய பெண் நுவரெலியாவைச் சேர்ந்தவர். நேற்று முன் தினம் பிக்குகளை நுவரெலியாவிலுள்ள அவரது உறவினர் வீட்டுக்கு அழைத்துச் சென்றபோது, மூன்று பிக்குகளும் பெண்ணும் நுவரெலியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விசாரணையில், மடத்தில் பிரதான பிக்குவுடனான பிரச்னையால், பெண்ணுடன் வந்ததாகக் கூறப்படுகிறது. சந்தேகத்திற்குரிய பெண் மற்றும் பிக்குகள் மேலதிக விசாரணைகளுக்காக மினுவாங்கொடை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# கைபேசி பாவிக்கும் குழந்தை மனநலம் குன்றி பெற்றோரை எதிரிகளாக கருதும் அவல நிலை!

## கொடையாளர் கௌரவிப்பு விழாவில் கல்விப்பணிப்பாளர் உமர் மௌலானா

காரைதீவு, ஓக. 28

**கைபேசி பாவிக்கும் குழந்தைகள் மனநலம் குன்றி, பெற்றோரை எதிரிகளாக கருதும் அவலநிலை உருவாகும். எனவே குழந்தைகளுக்கு கைப்பேசியை வழங்காதீர்கள் என்று அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலயகொடையாளர் கௌரவிப்பு விழாவில் உரையாற்றிய சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தெரிவித்தார்.**



மேற்படி கொடையாளிகள் கௌரவிப்பு விழா பாடசாலை அதிபர் பொன் பாரதிதாசன் தலைமையில் நேற்று முன் தினம் சிறப்பாக நடைபெற்றது.

கௌரவ அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவ ராஜா மற்றும் ஆசிரிய ஆலோசகர் பி.வி.குணரத்ன ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

அங்கு அன்னமலை கொடையாளிகளால் செய்யப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் திறந்து வைக்கப்பட்டன.

கொடையாளி சித்திர சேனன் விஜிகரனின் (ஜேர்மனி) ஏற்பாட்டில் வரையப்பட்ட பாடசாலை மதில் சுவர்ஓவியங்கள் திறந்து வைக்கப்பட்டன.

அத்துடன் கொடையாளி அருள்ராஜா ஜெகதீசனின் (அவுஸ்திரேலியா) ஏற்பாட்டில் நிறுவப்பட்ட கொடிக்கம்பத் தளம் மற்றும் காலை ஆராதனை மேடை என்பன திறந்து வைக்கப்பட்டன.

மேலும் கொடையாளி கே. எம்.நிறோஜன்( கொழும்பு) பெற்றோர் ஆசிரியர் ஒன்றுகூடல் மண்டபத்திற்கான அடிக்கல் நடப்பட்டது.

அங்கு வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா மேலும் பேசுகையில்-

கைப்பேசிகளால் எமது நிம்மதி குறைகிறது. குறிப்பாக குழந்தைகள் மத்தியில் தொலைபேசி மற்றும் இணையம் ஆகியவற்றின் அதிக பயன்பாடு காரணமாக குழந்தைகளுக்கு ஞாபக மறதி ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது.

குழந்தைகள் வெகுவாக இணையக் காணொளியில் விளையாட்டுகளுக்கு அடிமையாகின்றனர்.

இணையக் காணொளி விளையாட்டு போட்டிகளில் குழந்தைகள் தீவிரமாக அவதானம் செலுத்துவதால் மனநல நோய்க்கு உள்ளாகின்றனர். இதனால் பிள்ளைகள் கல்வியில் தோல்வியடைந்து பெற்றோரை எதிரிகளாக நோக்குகின்றனர்.

இதனால் குழந்தைகளின் எதிர்காலம் முற்றாக அழிந்துவிடும். எனவே குழந்தைகளுக்கு இயன்றவரை கையடக்க தொலைபேசியை வழங்குவதை பெற்றோர் தவிர்த்துக்கொள்ள வேண்டும்-என்றார்.

கொடையாளிகள் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. (அ)

# மனைவியைக் கொன்றவர் வைத்தியசாலையில் மரணம்

மட்டக்களப்பு, ஓக. 28

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் தனது மனைவியை கத்தியால் குத்தி கொலை செய்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட கணவன் கடந்த புதன்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி வந்தாறுமூலையில் மனைவியை கத்தியால் குத்தி கொலை செய்த சம்பவம் தொடர்பாக 74 வயதுடைய கணவர் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட அவர் சுகயீனம் காரணமாக மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த 23 ஆம் திகதி புதன்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த 74 வயதுடைய வீரக்குட்டி தவராசாவின் உடல் பிரேத பரிசோதனையின் பின்னர் வெள்ளிக்கிழமை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சிறுமி துஷ்பிரயோகம் 18 வயது காதலன் கைது

மட்டக்களப்பு, ஓக. 28

மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் 15 வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 18 வயதுடைய இளைஞன் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 15 சிறுமியை காதலித்து வந்த 18 வயது இளைஞர் திருமணம் முடிப்பதாகக் கூறி அவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக கிடைத்த முறைப்பாட்டையடுத்து வாகரை பொலிஸாரால் குறிப்பிட்ட இளைஞர் கைது செய்யப்பட்டதுடன் சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இளைஞர் கடந்த சனிக்கிழமை வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ)

# பெரண்டினா நிறுவனத்தினால் மண்டானையில் 180 குடும்பங்களுக்கு தலா 3500 ரூபா காசோலை




அம்பாறை, ஓக. 28

பெரண்டினா நிறுவனத்தினால் உணவுப்பற்றாக்குறையையும் பொருளாதார வீழ்ச்சியையும் நிவர்த்தி செய்யும் முகமாக, "லைப் லைன் - உங்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப.." எனும் தொனிப்பொருளில், திருக்கோவில் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மண்டானை கிராமத்தில் 180 குடும்பங்களுக்கு ஒரு வாடிக்கையாளருக்கு தலா 3500 ரூபா பெறுமதியான காசோலை வழங்கி வைக்கப்பட்டது..

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பெரண்டினா மட்டு-அம்பாறை பிராந்திய முகாமையாளர் பி.பிரதிலீபன், பெரண்டினா தம்பிலுவில் கிளை முகாமையாளர் பி.திலீபன், கள உத்தியோகத்தர்களான வை.டயஸ், ஆர். லதுராஜ் , எம்.ருஜிகரன், வை. சங்கீத் மற்றும் பெரண்டினா அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.விஜயராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். (அ)

# சாய்ந்தமருதில் நடந்த கலைக் கதம்பம் நிகழ்வு

அம்பாறை, ஓக. 28

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அதிகார சபை ஆகியன இணைந்து வழங்கிய கலைஞர்களின் கலைக் கதம்பம் நிகழ்வு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபீக்கா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்சான், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சுரேஷ்குமார், முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரி எம்.ஐ. ஜப்பார், முன்னாள் அதிபர் எம்.எம். இஸ்மாயில், எம்.சீ.ஏ.மாஹிர், நிந்தவூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம். அஷ்ரப், சிரேஷ்ட கவிஞர் கே.எம்.ஏ. அஸீஸ், முன்னாள் மாநகர சபை உறுப்பினர் கவிதாயினி சுஹைல் அஸீஸ் மற்றும் சாய்ந்தமருதில் செயற்படுகின்ற பிரதான கலை



மன்றங்களான முஹம்மதிய்யா கலை மன்றம், தக்வா கோலாட்டக் குழு, மருதம் கலைக்கூடல் மன்றம், நியூ வெண்ணிலா இசைக்குழு ஆகிய கலை மன்றங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட மூத்த கலைஞர்கள், மன்ற உறுப்பினர்கள், பொல்லடிக் கலைஞர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

இதன்போது மூத்த கலைஞர்களின் திறமைகள் மேடையேற்றப்பட்டு, நான்கு கலைமன்றங்களுக்கும் விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி அதிதிகளால் பாராட்டி கௌரவிக்கப்பட்டன.

அத்துடன் முஹம்மதிய்யா கலைமன்றம் மற்றும் தக்வா கோலாட்டக்குழு மாணவர்களின் கோலாட்டம் எனப்படும் பொல்லடி நிகழ்வு மேடையில் அரங்கேற்றப்பட்டதோடு, அதில் பங்குபற்றிய அனைத்து மாணவர்கள் மற்றும் அண்ணாவிமார்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

மருதம் கலைக்கூடல் மன்றக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகம் சபையோரால் பாராட்டி சிலாகித்து பேசப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பாடசாலைக்கு செல்லாமல் இருக்கும் மாணவர்களின் பெற்றோருக்கு சிறை

## சவுதி அரேபியா அதிரடி அறிவிப்பு

ரியாத், ஓக. 28

**சவுதி அரேபியாவின் கல்வித்தரத்தை உயர்த்த வேண்டுமெனில், கடுமையான விதிகளை உருவாக்க வேண்டும் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.**

இந்நிலையில், பாடசாலைக்கு வராமல் இருக்கும் மாணவர்களின் பெற்றோருக்கு சிறைத் தண்டனை விதிக்க சவுதி அரேபியா அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, சவுதி அரசு பிறப்பித்துள்ள உத்தரவில், ஒரு மாணவர் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் விடுமுறை எடுத்தால் முதல் எச்சரிக்கையும் 5 நாட்கள் விடுமுறை எடுத்தால் 2ஆவது எச்சரிக்கையும் விடுக்கப்பட்டு பெற்றோருக்கு தெரியப்படுத்தப்படும்.

10 நாட்கள் விடுமுறைக்கு பிறகு 3ஆவது எச்சரிக்கை அளித்து பெற்றோர் வரவழைத்து உறுதிமொழி பெறப்படும். தொடர்ச்சியாக 15 நாட்கள் வரவில்லையென்றால் அந்த மாணவர் வேறு பாடசாலைக்கு மாற்றப்படுவார்.

தொடர்ச்சியாக 20 நாட்கள் பாடசாலைக்கு வரவில்லை என்றால், அம்மாணவனின் பெற்றோரிடம் விசாரணை நடத்தப்படும், பதில் திருப்பதியில்லையெனில் பெற்றோர் மீது தேசிய குழந்தைகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதியப்பட்டு உரிய நீதிமன்றத்தின் மூலம் சிறை தண்டனை விதிக்கப்படும்.

இந்த புதிய உத்தரவு வரும் கல்வி ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் என அரசு பிறப்பித்த உத்தரவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(அ)

# அமெரிக்க ஹெலிக்கொப்டர் அவுஸ்திரேலியாவில் விபத்து



கான்பரா, ஓக. 28

அமெரிக்காவின் மரைன் படைப்பிரிவை சேர்ந்த 20 பேருடன் பயணித்துக்கொண்டிருந்த ஹெலிக்கொப்டர் ஒன்று அவுஸ்திரேலியாவில் விழுந்து நொருங்கியுள்ளது.

பயிற்சியின்போது ரிவி தீவுகளுக்கு மேல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

டார்வினிலிருந்து 60 கிலோமீற்றர் வடக்காக உள்ள மெல்விலே தீவில் ஹெலிக்கொப்டர் விழுந்து நொருங்கியுள்ளது.

ஹெலிக்கொப்டர் ஒன்று அந்த பகுதிக்குஅனுப்பப்பட்டுள்ளது. பொலிஸார் விரைந்துள்ளனர் என தெரிவித்துள்ள அதிகாரிகள், சிலர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ளனர்.

23 பேர் ஹெலிக்கொப்டரில் பயணித்தனர்.அவர்கள் அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்தவர்கள். அவுஸ்திரேலிய படையினர் எவரும் அதில் பயணிக்கவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயிரிழப்புகள் குறித்து இதுவரை விவரங்கள் வெளியாகவில்லை.

# அமெரிக்காவில் கார் தரிப்பிடத்தில் காதலியின் கதையை முடித்த இந்திய வம்சாவளி இளைஞன்!

நியூயோர்க், ஓக. 28

அமெரிக்காவில் கார் தரிப்பிடத்தில் சீக்கிய வாலிபர் தனது காதலியை சுட்டு கொன்று விட்டு தப்பியோடிய நிலையில், கைது செய்யப்பட்டுள்ளார்.

கலிபோர்னியா மாகாணத்தில் ரோஸ்வில்லே பகுதியில் அமைந்துள்ள கேலேரியா வணிக வளாகத்தின், 5 அடுக்க வாகன தரிப்பிடத்தில் இந்த கொலைச் சம்பவம் நடந்தது.

சிம்ரன்ஜித் சிங் (வயது-29) என்ற சீக்கிய வாலிபர் தனது 34 வயது காதலியுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

ஒரு கட்டத்தில் ஆத்திரமடைந்த அந்த நபர், காதலியை துப்பாக்கியால் சுட்டு கொன்றார்.

பின்னர் அதே இடத்தில் துப்பாக்கியை போட்டு விட்டு தப்பியுள்ளார்.

சிங் சம்பவத்திற்கு பின்னர் பணம் கொடுத்து சட்டை ஒன்றை வாங்கியுள்ளார். பின்பு புதிய சட்டையை போட்டு கொண்டு, பழைய சட்டையை தனது பையில் மறைத்து வைத்து கொண்டார்.

துப்பாக்கிச் சூடு நடந்தது தெரிய வந்ததும், அந்த பகுதியில் ஊரடங்கு நிலை ஏற்பட்டது. பொலிஸார் பாதுகாப்பு வளையம் ஏற்படுத்தி குற்றவாளியை தேடினர்.



சாட்சிகள் மற்றும் கடைசியாக தாக்குதலில் ஈடுபட்ட நபர் சென்ற திசை உள்ளிட்ட பிற விவரங்கள் ஆகியவற்றை கொண்டு பொலிஸார், சிங்கை தேடி வந்தனர். இதன்பின் கண்காணிப்பு கேமரா உதவியுடன் சிங்கை பொலிஸார் கைது செய்தனர். தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

சிங் ஜாமீன் இல்லாமல் கலிபோர்னியாவில் உள்ள பிளேசர் கவுண்டி சிறையில் அடைக்கப்பட்டார். உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டதும், பாதிக்கப்பட்டவரின் பெயரை வெளியிடுவோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# அமெரிக்க பாடசாலையில் நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் துப்பாக்கிச் சூடு!

நியூயோர்க், ஓக. 28

அமெரிக்காவின் ஓக்லஹோமா மாகாணத்தில் வெள்ளிக்கிழமை இரவு சோக்டாவில் உயர்நிலைப் பாடசாலையில் உதைபந்துப் போட்டி நடந்து கொண்டிருந்த போது குறைந்தது நான்கு பேர் சுடப்பட்டனர்.

உள்ளூர் நேரப்படி வெள்ளிக்கிழமை இரவு 10:30 மணிக்கு சோக்டாவ் உயர்நிலைப் பாடசாலைக்கும் டெல் சிட்டி உயர்நிலைப் பாடசாலைக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகக் கூறப்படும் செய்திகளுக்குத் தாங்கள் பதிலளித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அடையாளம் தெரியாத நபர்களால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இச்சம்பவத்தின் போது, பணியில் இல்லாத ஒரு பொலீஸ் அதிகாரியும் துப்பாக்கியால் சுட்டார்.

பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். ஒரு பாதிக்கப்பட்டவர் விடுவிக்கப்படுவதற்கு முன்பு அவரது தொடையில் காயத்திற்கு சிகிச்சை பெற்றார். பாதிக்கப்பட்ட மற்ற மூன்று பேரின் நிலைமைகள் இன்னும் தெரியவில்லை. மேலும், ஒரு நோயாளிக்கு கால் முறிவு ஏற்பட்டதால் சிகிச்சை பெற்று வந்தார்.



துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டவுடன் வீரர்களும் பார்வையாளர்களும் மைதானத்தை விட்டு ஓட ஆரம்பித்ததாக அசோசியேட்டட் பிரஸ் தெரிவித்துள்ளது. மற்றவர்கள் மைதானத்தில் படுத்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக சோக்டாவ் பொலிஸார் தற்போது விசாரணையை தொடங்கியுள்ளனர். முன்னதாக, துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்தவுடன் சம்பவ இடத்தை விட்டுச் சென்ற சந்தேக நபர் ஒருவரின் விவரங்களைப் பொலிஸார் பெற்றனர். எனினும், அவர் இன்னும் கைது செய்யப்படவில்லை.

சோக்டாவ் காவல்துறைத் தலைவர் கெல்லி மார்ஷலின் கூற்றுப்படி, துப்பாக்கிச் சூட்டின் போது குறைந்தது இரண்டு துப்பாக்கிகள் சுட்டதாக அறிக்கைகள் உள்ளன என கூறினார்.

# மடகாஸ்காரில் ஏற்பட்ட சன நெரிசலில் 15 பேர் பலி!

## 110 பேருக்கு காயம்

அன்ரனானரிவோ, ஓக. 28

மடகாஸ்காரில் ஏற்பட்ட சன நெரிசலில் சிக்குண்டு உயிரிழந்தவர்களின எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளதுடன் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 110 ஆக உயர்வடைந்துள்ளது.

மடகாஸ்காரில் இந்திய பெருங்கடல் தீவு போட்டிகள் எதிர்வரும் செப்ரெம்பர் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இதற்கான ஆரம்ப நிகழ்ச்சிகள் நேற்று முன் தினம் பரியா என்ற தேசிய மைதானத்தில் ஆரம்ப நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

குறித்த நிகழ்ச்சியில் ஏற்பட்ட சன நெரிசலில் சிக்குண்டு 7 குழந்தைகள் உட்பட குறைந்தது 15 பேர் உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



குறித்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரசிகர்கள் கூடிய நிலையில் சன நெரிசல் ஏற்பட்டது.

இந்த சன நெரிசலில் சிக்குண்டு 15 பேர் உயிரிழந்துள்ளதுடன் 110 பேர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# உக்ரைனில் விமான விபத்து! மூன்று விமானிகள் மரணம்!!



கீவ், ஓக. 28

உக்ரைனில்இடம்பெற்ற விமான விபத்தொன்றில் 3 விமானப்படை விமானிகள் உயிரிழந்துள்ளனர்.

ரஷ்யாவின் படையெடுப்பின் ஆரம்ப கட்டத்தின் போது கீவ் மீதான போரில் பங்கேற்று மிகவும் பிரபலமான ஆண்ட்ரி பில்ஷிகோவ் என்ற விமானியும் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு உக்ரைன் பகுதியில் பறந்து கொண்டிருந்த இரண்டு எல்-39 பயிற்சி விமானங்கள் விபத்துக்குள்ளாகியிருந்தன.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றதாக உக்ரைனின் விமானப்படை செய்தித் தொடர்பாளர் யூரி இஹ்னாட் உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி காணொளியொன்றின் ஊடான உரையில் உயிரிழப்புகளை உறுதிப்படுத்தி, இரங்கல் தெரிவித்துள்ளதுடன், உக்ரைனின் சுதந்திர வானத்தை பாதுகாத்த எவரையும் தமது நாடு ஒருபோதும் மறக்காது எனவும் கூறியுள்ளார். (அ)

# கடந்த 8 மாதங்களில் 62 துப்பாக்கிச்சூடுகள்!

## நாடு முழுவதும் 39 கொலைகள்!!

**கொழும்பு, ஓக. 28**

**இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து நாடு முழுவதும் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் 39 பேர் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் மேலும் 30 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர் .**

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து நாடு முழுவதும் 62 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பதிவாகியுள்ளன, அவற்றில் பெரும்பாலானவை ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களால் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேலும் சில துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் தனிப்பட்ட தகராறு மற்றும் சொத்துப் பிரச்னை காரணமாக இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

எவ்வாறாயினும், பெரும்பாலான துப்பாக்கிச் சூடு மற்றும் கொலைகள் தங்கள் வாடிக்கையாளர்களுக்காக வேலை செய்யும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளால் மேற்கொள்ளப்பட்டன என்பதை அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர் .

இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து நாடு முழுவதும் அதிக எண்ணிக்கையிலான கொலைகள் பதிவாகியுள்ளன.

# ஏழு கோடி ரூபாய் பெறுமதியான மாணிக்கக்கல் திருடிய தொழிலாளி

கொழும்பு, ஓக. 28

மாத்தளை - லக்கல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேவலதெனிய, எல்பிட்டியவில் அமைந்துள்ள மாணிக்கக்கல் அகழும் தளத்தில் இருந்து ஏழு கோடி ரூபாய் பெறுமதியான மாணிக்கக்கல்லை திருடியதாக கூறப்படும் நபரை கைது செய்ய மாத்தளை பிரிவு குற்றப்புலனாய்வு பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுள்ள 62 வயதுடைய வர்த்தகர் இது தொடர்பில் மாத்தளை குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாடு செய்த தொழிலதிபரின் மாணிக்கக்கல் அகழ்வு தளத்தில் கூலித் தொழிலாளியாக பணிபுரியும் நபரே மாணிக்கக்கல் அகழ்வின் போது கிடைத்த ஏழு கோடி பெறுமதியான மாணிக்கக்கல்லை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஏழு கோடி மதிப்பிலான மாணிக்கக்கல்லை திருடிச் சென்றவர் குறித்து இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

# நோயுற்ற தாயை பார்க்க அனுமதி இல்லை பதவியைத் துறந்த பொலிஸ் கான்ஸ்டபிள்!

கொழும்பு, ஓக. 28

நோய்வாய்ப்பட்ட தனது தாயை பார்க்க விடுமுறை வழங்கப்படாத காரணத்தினால் ஆராச்சிக்கட்டுவ பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

பொலனறுவை, புலஸ்திகம பிரதேசத்தில் வசிக்கும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளார்.

பணிக்கு வந்து 60 நாட்களாகியும் விடுப்பு எடுக்காமல் தனது கடமைகளை செய்ததாகவும் அதன்போது தாய்க்கு உடல் நிலை சரியில்லாமல் இருப்பதை அறிந்து விடுமுறைக்கு விண்ணப்பித்தும் விடுமுறை வழங்கப்படவில்லை எனவும் பொலிஸ் பதிவேட்டில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலைமையினால் அவர் தனது கடமைகளை செய்வதற்கு மனதளவில் தகுதியற்றவர் எனவும் அந்த குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கடந்த 25 ஆம் திகதி சேவையை விட்டு வெளியேறியதாக ஆராச்சிக்கட்டுவ பொலிஸ் அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

(அ)

# கோழி இறைச்சி விலை 100 ரூபாவால் குறைப்பு!

கொழும்பு, ஓக. 28

ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் விலையை 100 ரூபாவால் குறைக்க அகில இலங்கை கோழி இறைச்சி வியாபாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அகில இலங்கை கோழி இறைச்சி வியாபாரிகள் சங்க பிரதிநிதிகளுடன் கடந்த வெள்ளிக்கிழமை விவசாய அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் அவர் இதனை உறுதிப்படுத்தினார்.

(அ)

# வறட்சியான காலநிலையினால் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்!

கொழும்பு, ஓக. 28

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

மிகக் குறைந்த நீர் உள்ள இடங்களில் குளிப்பதும், மீன்பிடிப்பதும் இந்த நோய்களுக்கு வழிவகுக்கும் என அதன் தலைவர் உபுல் ரோஹன குறிப்பிடுகின்றார்.

குறைந்தளவு நீர் உள்ள இடங்களில் குளிப்பதன் மூலம் தோல் நோய்கள் மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்படும் அபாயம் உள்ளதாக உபுல் ரோஹண வலியுறுத்தியுள்ளார்.

குடிதண்ணீர் விற்பனை செய்யும் இடங்களை உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஏனைய முறைகளில் கிடைக்கும் தண்ணீரை குடிக்காமல், சுட்டு ஆறிய தண்ணீரையே பயன்படுத்தவேண்டும் என்றும் சங்கம் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது .

(அ)

# கனடா விசா பெற்றுத்தருவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்டவர் கைது!

கொழும்பு, ஓக. 28

கனடா விசா பெற்றுத்தருவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்ட பிரதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் 05 பேரை ஏமாற்றி பணத்தை மோசடி செய்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த நபர், 26 இலட்சம் ரூபாவிற்கு மேல் மோசடி செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னரும் கனடா விசாவினை பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்த சம்பவம் ஒன்று பதிவாகியிருந்ததுடன், அந்தச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் இவரே என பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# சில மாதங்களில் 800 மருத்துவர்கள் நாட்டிலிருந்து வெளியேறுகின்றனர்!

கொழும்பு, ஓக. 28

780 மருத்துவர்கள் அடுத்த சில மாதங்களில் நாட்டிலிருந்து வெளியேற உள்ளனர் என தகவல்கள் வெளியாகின்றன.

எம்.டி பட்டத்தை பூர்த்தி செய்த மருத்துவர்களே நாட்டிலிருந்து வெளியேறவுள்ளனர்.

822 மருத்துவர்கள் தற்போது வெளிநாடுகளில் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

822 மருத்துவர்களும் நாடு திரும்புவதற்கான வாய்ப்பு குறைவு என சிரேஸ்ட சுகாதார அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போதுள்ள மருத்துவர்கள் விசேடவைத்திய நிபுணர்களை தக்கவைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுவதாக அவர் தெரிவித்தார்.

(அ)

# கண்டி நகர பாடசாலைகளுக்கு பூட்டு

கொழும்பு, ஓக. 28

கண்டி நகர எல்லைக்குள் உள்ள அனைத்து அரச பாடசாலைகளும் இன்று முதல் 31 ஆம் திகதி வரை மூடப்படவுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

ஸ்ரீ தலதா மாளிகையின் எசல பெரஹரவிற்கான போக்குவரத்து நெரிசல் காரணமாக கண்டி நகர எல்லைக்குள் உள்ள அனைத்து அரச பாடசாலைகளும் இன்று முதல் 31 ஆம் திகதி வரை மூடப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# 2024 ஆம் ஆண்டு பட்ஜெட் சவாலானதாக அமையும்

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய

கொழும்பு, ஓக. 28

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கான அமைச்சுக்களின் செலவின முன்மொழிவுகள் குறித்த மீளாய்வு இன்று முதல் அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சின் செயலாளரின் தலைமையில் அந்தந்த அமைச்சுகளுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் இது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்த



வருட வரவு செலவுத் திட்டம் சவாலான ஒன்றாக இருக்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, விசேட தேவையுடையவர்கள், முதியோர் உதவித்தொகை, சிறுநீரக நோய் மானியம், சமுர்த்தி, மற்றும் அஸ்வெசும உள்ளிட்ட பயனாளிகளுக்கு முதற்கட்டத்தின் அனைத்து கொடுப்பனவுகளும் அடுத்த வாரம் முதல் வழங்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார்.

அஸ்வெசும கொடுப்பனவுகளுக்காக 5.4 பில்லியன் ரூபாவும், விசேட தேவையுடையவர்கள், முதியோர் கொடுப்பனவுகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கும் 1.8 பில்லியன் ரூபாவும், சமுர்த்தி கொடுப்பனவு கிடைத்து அஸ்வெசும திட்டத்தில் உள்வாங்கப்படாமல் மேன்முறையீடு செய்துள்ளவர்களுக்கு 1.2 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

(அ)

## கடும்...

அதன்படி வளிமண்டலவியல் திணைக்களம் நாட்டின் பல பகுதிகளுக்கு 'வெப்ப சுட்டெண் ஆலோசனை' வெளியிட்டுள்ளது.

வடமத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் சில இடங்களில் வெப்பச் சுட்டெண், மனித உடலில் உணரப்படும் வெப்பநிலை 'எச்சரிக்கை' மட்டத்திற்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் ஆலோசனையின் படி தயாரிக்கப்பட்ட சுட்டெண்ணின் படி, 'எச்சரிக்கை' நிலை என்பது நீண்ட கால வெளிப்பாடு மற்றும் செயல்பாடுகளால் சோர்வு சாத்தியமாகும். மேலும் வெப்பத்தினால் தசை பிடிப்புகளையும் ஏற்படுத்தலாம்.

அதன்படி, வெளியில் வேலை செய்வதை கட்டுப்படுத்தவும், முதியவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்களைக் கவனிக்கவும், குழந்தைகளை வாகனங்களில் கவனிக்காமல் விட்டுச் செல்வதைத் தவிர்க்கவும், முடிந்தவரை அடிக்கடி நிழலில் ஓய்வெடுக்கவும், அதிக நீர் பருகவும், இலகுரக மற்றும் வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடைகளை அணிந்து, அதிக நீர் பருகவும் பொது மக்களுக்கு வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

இன்று முதல் அடுத்த சில நாட்களில் நாட்டின் தென்மேற்குப் பகுதியில் மழையுடனான வானிலையில் அதிகரிப்பு எதிர்க்கப்படுவதாக என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா, கண்டி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யக் கூடும் என அந்த திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது. (அ)

## ஷி யான் 6...

திகதி வரை இரண்டு நாட்கள் இலங்கை கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டிருந்தது.

இதேநேரம், 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி சீனாவின் கடற்படை கப்பலொன்று அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தந்தது.

யுவான் வாங் 5 எனும் இந்தக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு இலங்கை வழங்கிய அனுமதி தொடர்பில் இந்தியா கவலை வெளியிட்டிருந்தது.

அத்துடன், இந்தியாவை உளவுபார்க்கும் நோக்கிலேயே குறித்த கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டதாக இந்தியா குற்றச்சாட்டுகளை முன்வைத்தது.

இந்த பின்னணியிலே, "ஷி யான் 6" எனும் கடல்சார் ஆய்வு கப்பலை இலங்கையில் தரித்துவைப்பதற்கு சீனா கடந்த வருடம் அனுமதி கோரியிருந்தது.

60 பேரைக் கொண்ட "ஷி யான் 6" எனும் அறிவியல் ஆராய்ச்சிக் கப்பலானது கடல்சார்வியல், கடல் புவியியல் மற்றும் கடல் சூழலியல் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்த நிலையில், குறித்த கப்பல் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்களில் நங்கூரமிட திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், இந்திய பெருங்கடலில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்து வருதல் மற்றும் இலங்கையில் சீனாவின் செல்வாக்கு குறித்தும் இந்தியா சந்தேகம் வெளியிட்டுள்ளது.

இதனிடையே, இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதற்காக பாதுகாப்பு பிரச்சினைகளை மேற்கோள் காட்டுவது சில நாடுகளுக்கு முற்றிலும் நியாயமற்றது என சீன தெரிவித்துள்ளது. (அ)

## நல்லூர்...

பகுதியில் இரண்டு சம்பவங்கள் ஏற்கனவே பதிவாகியிருந்த நிலையில், அதற்கு அண்மையாக நேற்று அதிகாலை 2 மணியளவில் யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கிலியன் வீதியில் ஒரு வீட்டில் கத்தி முனையில் நகை கொள்ளையிடப்பட்டுள்ளது.

அந்த வீட்டின் கணவன் - மனைவி இருவரும் உடுவில் பிரதேச செயலகம், நல்லூர் பிரதேச செயலகம் ஆகியவற்றில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்கள். வீட்டின் பின் கதவை உடைத்து உள்நுழைந்த முகத்தை மறைத்த மூவரடங்கிய கும்பல் வீட்டில் அறைக்குள் உறக்கத்தில் இருந்த மகனை எழுப்பி கையையும் காலையும் பிணைத்து கட்டிவைத்து தாக்கி கத்தி முனையில் அச்சுறுத்தி வீட்டிலிருந்த 20 பவுண் நகைகளை திருடிச் சென்றுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பொலிஸார் திருட்டு இடம்பெற்ற வீட்டுக்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

கடந்த புதன்கிழமையிலிருந்து தொடர் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வரும் நிலையில் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் ஏற்கனவே யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. (அ)

## 4 உள்ளக...

அறிவித்துள்ளது.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடிய தூதரகம் இலங்கை மற்றும் மாலைதீவில் இயங்கிவரும் உள்ளகக் கட்டமைப்புக்களுக்கான வருடாந்த நிதியுதவியின் மூலம் அக்கட்டமைப்புக்கள் திறம்பட இயங்குவதற்கும், அதனூடாக நாட்டின் சமூகக்கட்டமைப்பு முன்னேற்றமடைவதற்குமான பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

அதன்படி 2023 - 2024 ஆம் ஆண்டில் உள்ளக செயற்திட்டங்களுக்கான கனேடிய நிதியுதவி நடைமுறையின்கீழ் நிதியுதவி பெறும் கட்டமைப்புக்களின் பட்டியல் கனேடிய தூதரகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

அப்பட்டியலின் பிரகாரம் இம்முறை இலங்கையில் இயங்கும் 4 அமைப்புக்களுக்கும், மாலைதீவில் இயங்கும் 4 அமைப்புக்களுக்கும் நிதியுதவி வழங்கப்படவுள்ளன. இலங்கையைச்சேர்ந்த அமைப்புக்களாக ஈக்குயிற், சூழலியல் அமைப்புக்களின் சம்மேளனம், தேசிய இன ஒருமைப்பாட்டு நிலையம் மற்றும் காது கேளாதோர், பார்வையற்றோருக்கான பாடசாலை என்பன பெயரிடப்பட்டுள்ளன.

உள்ளக செயற்திட்டங்களுக்கான கனேடிய நிதியுதவி நடைமுறையானது உள்ளகப் பிரச்னைகளை உரியவாறு கையாள்வதற்கான உந்துதலை இக்கட்டமைப்புக்களுக்கு வழங்குவதுடன் சிவில் சமூகம் மற்றும் இக்கட்டமைப்புக்கள் இயங்கும் பிரதேசங்களில் வாழும் மக்களுடனான தொடர்புகளை வலுப்படுத்துகின்றது. அந்தவகையில் இம்முறை மேற்குறிப்பிட்ட 4 கட்டமைப்புக்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியின் ஊடாக அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சி நிர்வாகத்தை மேம்படுத்தல், பெண்கள் ஊக்குவிப்பு, சூழலியல் மற்றும் காலநிலைசார் நடவடிக்கைகள், அனைவருக்கும் ஏதுவான வளர்ச்சி என்பவற்றை ஊக்குவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிதியுதவி வழங்கலின் மூலம் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் வளர்ச்சி மற்றும் சுபீட்சத்துக்குப் பங்களிப்புச்செய்வது குறித்துத் தாம் மகிழ்ச்சியடைவதாக கனேடிய தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# ஒவ்வாமையால் மேலும் ஒரு நோயாளி மரணம்?

கொழும்பு, ஓக. 28

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 50 வயதுடைய நபரொருவர் நோய் எதிர்ப்பு மருந்து வழங்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

ஒவ்வாமை காரணமாக அவர் உயிரிழந்தாரா என்பது தொடர்பில் இன்று பரிசீலனை நடத்தப்படும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி. விஜேசூரிய தெரிவித்தார்.

உயிரிழந்தவர் வரக்காபொலவை சேர்ந்தவர்.

அதுவரை குறித்த மருந்து நோயாளர்களுக்கு வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதி பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். (அ)

## நடனமாடி...

கனடாவில் இருந்து வருகை தந்த குறித்த நபர் பாடல் ஒன்றுக்கு நடனமாடிக் கொண்டு இருந்தவேளை திடீரென கீழே விழுந்தார்.

அவரை தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை, ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அதன்பின்னர் பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

அவரது மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

சோடா கொம்பனி வீதி, மல்லாகம் பகுதியைச் சேர்ந்த நாகராஜா சசிதரன் (வயது 61) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (அ-3)

## வேட்பாளர்...

காரணமாக பல்வேறு பிளவுகளும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ளன.

ஒரு குழு பஸில் ராஜபக்ஷவின் பெயரையும், மற்றொரு குழு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் பெயரையும் முன்மொழிந்துள்ளது.

எவ்வாறாயினும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக தனது அமெரிக்க குடியுரிமையை நீக்குவதற்கு பஸில் ராஜபக்ஷ தயக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அதன் காரணமாக அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் என கட்சியின் குழுவொன்று போர்க்கொடி உயர்த்தியுள்ளது.

எனினும் நாமல் இது தொடர்பில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. அவர் எதிர்க்கட்சிக்கு சென்று எதிர்க்கட்சிப் பணியை செய்வதையே விரும்புவதாக பொதுஜன பெரமுனவின் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசியலமைப்பின் பிரகாரம் அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்குவதால் கூட்டணியை அமைக்கும் பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளதுடன், புதிய கூட்டணிகளும் உருவாகி வருகின்றன.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக நியமிக்க வேண்டுமென்றும் ஒரு தரப்பினர் கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, எதிர்க்கட்சிகள் சார்பில் பலர் வேட்பாளர்களாக களமிறங்கவுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் சஜித் பிரேமதாஸவும் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அநுரகுமார திஸாநாயக்க களமிறங்குவதை உறுதி செய்துள்ளனர். (அ)

## இந்தியா...

ஆய்வுக் கப்பல்கள், விமானங்களின் வருகைகளின்போது வெளிப்படைத் தன்மையை பேணுவதற்காக "நிலையான செயற்பாட்டு பொறிமுறை" வரைபொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அது விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு அடுத்த வாரம் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் விஜயம் செய்யவுள்ளதோடு, ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி சீனாவின் 'ஷி யான் 6' ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

இலங்கை அரசாங்கம் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் இரு தரப்பு உறவுகளைக் கொண்டுள்ளதுடன் இரு நாடுகளும் இலங்கைக்கு நீண்ட கால ஒத்துழைப்புகளை வழங்கி வருவதை அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் இந்தியாவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஜயம் செய்திருந்ததுடன், சீனாவிற்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன விஜயம் மேற்கொண்டிருந்தார்.

ஜனாதிபதியின் விஜயத்தின் போது எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கு அமைவாக திருகோணமலையை பொருளாதார அபிவிருத்தி வலயமாக மேம்படுத்துவதற்கு இந்தியாவும் பங்களிக்கவுள்ளது.

எரிபொருள், எரிசக்தி துறைகளிலும் இந்தியா இலங்கையுடன் உடன்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளது.

இது தொடர்பிலான செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக எதிர்காலத்தில் இந்தியாவிலிருந்து உயர்மட்ட தரப்பினர் இலங்கைக்கு விஜயங்களை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

குறித்த விஜயங்கள் குழப்பங்களை ஏற்படுத்தப்போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்

இலங்கை அணிசேரா கொள்கையை பின்பற்றி வருவதுடன் இந்தியா, சீனா ஆகிய நாடுகளுடன் மிக நெருக்கமாக இணைந்து செயற்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## 18மாவட்டங்களில்...

பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். 5 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் ஓரளவுக்கேனும் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, பொலனறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கேகாலை, கம்பஹா, மாத்தளை, கண்டி, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் 84,643 குடும்பங்கள் குடிதண்ணீர் தட்டுப்பாடுக்கு முகம் கொடுத்துள்ளன.

நிலவும் வறண்ட காலநிலை காரணமாக நாடு முழுவதும் தண்ணீருக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் பல பகுதிகளுக்கு பௌசர்கள் மூலமே தண்ணீர் விநியோகம் இடம்பெற்று வருகிறது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம்வரை போதிய மழை பெய்யாது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு இலங்கையில் போதிய அளவு தென்மேற்கு பருவமழை பெய்யவில்லை. எல் நினோ விளைவு காரணமாக இவ்வாறு போதிய மழை பெய்யாதிருக்கலாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் 70,000 இற்கும் மேற்பட்டவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். பல பகுதிகளுக்கு பௌசர்கள் மூலமே இங்கு குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறுகிறது.

அத்துடன், மலையக பகுதிகளிலும் நிலவும் கடுமையான வறட்சியால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டங்கள் குறைந்துள்ளன. (அ)

ஈழநாடு Eelanadu

## யாழில் திஸ்ஸ அத்தநாயக்க



யாழ்ப்பாணம், ஒக. 28

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்காவின் பங்குபற்றலுடன் நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு மற்றும் சுகாதாரத்துறை எதிர்கொள்ளும் பிரச்னைக்கு தீர்வு வழங்குவதை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

நேற்று முற்பகல் 11.00 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்ற போராட்டத்தில் பொதுமக்களிடம் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன. (அ)

## எம்.பிக்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட இடமளியேன்

### ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்



கொழும்பு, ஒக. 28

"மக்கள் பிரதிநிதிகளே பாராளுமன்ற உறுப்பினர்கள். அவர்களின் உயிர்களுக்கு அல்லது அவர்களின் வீடுகளுக்கு ஆபத்து ஏற்பட ஒருபோதும் இடமளியேன்."

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியின் கொழும்பு வீடு முன்பாக நேற்று இரண்டாவது நாளாகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையிலேயே ஜனாதிபதி மேற்படிக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

"எங்கு பாதுகாப்பு கேள்விக்குட்படுத்தப்படுகின்றதோ அங்கு பொலிஸாரையும் படையினரையும் வரவழைத்துப் பாதுகாப்பைப் பலப்படுத்துவேன்.

தற்போது சில தரப்பினர் எடுத்ததற்கெல்லாம் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துகின்றனர். எம்.பிக்களையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. எனினும், எம்.பிக்களின் உயிர்களுக்கும், அவர்களின் வீடுகளுக்கும் ஆபத்து ஏற்பட ஒருபோதும் இடமளியேன்."

- என்றார். (அ)

## ஊழல் ஒழிப்புச் சட்ட மூலத்தை செயல்படுத்த 2 மாதங்களாகும்

கொழும்பு, ஒக. 28

ஊழல் ஒழிப்புச் சட்ட மூலத்தை செயல்படுத்த மேலும் 2 மாதங்கள் ஆகுமென நீதியமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் சட்டம் தொடர்பான பல விதிமுறைகள் தயாரிக்கப்படவேண்டும் எனவும் அதனால் தான் இரண்டு மாதங்கள் ஆகும் எனவும் அவர் கூறினார்.

இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு புதிய சட்டத்தின் அதிகாரங்களுக்கு அமைய செயற்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஊழல் ஒழிப்பு சட்டமூலம் ஜூலை மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாதுகாப்புச்சபையின் உயர் உறுப்பினர் ஒருவருக்கு எதிராக சி.ஐ.டி. விசாரணை!

கொழும்பு, ஒக. 28

**தேசிய பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினரும் உயர்மட்ட பாதுகாப்புப் பிரிவின் தலைவருமான ஒருவர் தொடர்பாக தேசிய புலனாய்வுத் திணைக்களம் விசாரணையை ஆரம்பித்துள்ளது.**

கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் மே மாதம் 9ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க முறையான நடவடிக்கைகளை எடுக்காமை, தெளிவான கட்டளைகள் மற்றும் உத்தரவுகளை வழங்காமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலேயே இவருக்கு எதிராக விசாரணை நடத்தப்படுகின்றது.

இதன்படி, மிரிஹானவில் உள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் தனிப்பட்ட உத்தியோகபூர்வ இல்லத்துக்கு முன்பாக போராட்டம் நடத்தப்பட்டமை, பிரதமர் மற்றும் அமைச்சர்களின் வீடுகளை எரித்து அழித்தமை, அரச தலைவரின் பாதுகாப்பை உறுதி செய்யாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்கு உரிய உத்தரவுகளை பிறப்பிக்காமை தொடர்பிலேயே இவ்வாறு விசாரணை நடத்தப்படவுள்ளது.

இந்த விசாரணையானது குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் அதிகாரிகள் இரகசியமாக நடத்தும் விசாரணை எனவும், இந்த விசாரணையை ஆரம்பிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு எவ்வித முறைப்பாடும் கிடைக்கப் பெறவில்லை எனவும் பெயர் வெளியிட விரும்பாத நபர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த உயர் பாதுகாப்புப் பிரிவின் பிரதானிக்கு எதிராக விசாரணை நடத்தப்படுவதற்குக் காரணம், சம்பந்தப்பட்ட அதிகாரிக்கும் முன்னாள் அதிகாரி ஒருவருக்கும் இடையிலான தனிப்பட்ட முரண்பாடுதான் காரணம் எனவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், இந்த விசாரணையை முப்படைகளின் தலைவர்கள் அடங்கிய விசாரணைக் குழு நடத்தவுள்ளதாகவும், பொலிஸாருக்கு வழங்கிய எழுத்துமூல உத்தரவின் பிரகாரம் விசாரணை நடத்தப்படும் எனவும் இது தொடர்பில் செய்தி வெளியிட்டுள்ள தேசிய பத்திரிகையொன்று குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சட்டமா அதிபரின் பணிப்பின் பிரகாரம் பாதுகாப்புச் சபையின் இந்த உயர் பிரதானியிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தவுள்ளதாகவும், விசாரணையின் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் குறித்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

# ஐ.நா. பேரவையின் கூட்டத் தொடர் செப்ரெம்பர் 11 ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, ஒக. 28

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாகி, ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இதன்போது இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக்கினால் எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னதாக ஒழுங்கமைப்புக் கூட்டம் இன்று திங்கட்கிழமை ஜெனிவாவில் நடைபெறவுள்ளதோடு, இம்முறை நடைபெறும் ஜெனிவா அமர்வின்போது இலங்கை தொடர்பில் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 51 கீழ் 1 தீர்மானத்தின் உள்ளடக்கங்களின் அமுலாக்க அடைவு மட்டம் சம்பந்தமான மதிப்பீடும் வெளிப்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் எவ்விதமான விசேட தூதுக்குழுவும் பங்கேற்காது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அறிவித்துள்ளார்.

அதேநேரம், உள்நாட்டில் இலங்கை அரசாங்கம் எட்டியுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், ஐ.நாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி சுபாஷினி அருணாதிலக இம்முறை அமர்வு தொடர்பிலான விடயங்களை தலைமையேற்று முன்னெடுக்கவுள்ளதோடு, இலங்கையின் சார்பிலான பதிலளிப்புக்களையும் வழங்கவுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் செயற்படும் இராஜதந்திரிகளிடத்தில் இலங்கையின் முன்னேற்றகரமான செயற்பாடுகள் தொடர்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மேலும் கூறினார். (அ)

# அமிர்தலிங்கத்தின் 96ஆவது பிறந்தநாள் நினைவுப் பேருரை யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், ஒக. 28

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 96 ஆவது பிறந்தநாள் தின நினைவுப் பேருரை நிகழ்வு நேற்று மாலை 4.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முன்னாள் செயலாளர் கலாநிதி கா.விக்கினேஸ்வரன் அமிர்தலிங் கத்தின் நினைவுப் பேருரை ஆற்றினார். சிறப்புரையை டான் குழுமத் தலைவர் எஸ்.எஸ்.குகநாதன், தென்னிந்திய திருச்சபையின் ஓய்வுநிலை பேராயர் வணபிதா. எஸ். ஜெபநேசன் ஆகியோர் ஆற்றினர்.

இந்த நிகழ்வில் இலங் கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், சி.வி.விக்னேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)









இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# ஸ்பெயினை உலுக்கும் உதைபந்தாட்ட முத்தம்

ஸ்பெய்னின் உதைபந்தாட்ட சங்கத்தின் தலைவர் வீராங்கனையொருவரை உதட்டில் முத்தமிட்டமை தொடர்பான சர்ச்சை தீவிரமடைந்துள்ள நிலையில் பல வீராங்கனைகள் எதிர்காலத்தில் போட்டிகளை புறக் கணிக்கப்போவதாக எச்சரித்துள்ளனர்.

ஸ்பெய்ன் உதைபந்தாட்ட சங்கத் தலைவர் லூயிஸ் ரூபியாலெஸ், ஜெனி ஹேர்மசோ என்ற வீராங்கனையை முத்தமிட்டதே பெரும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

இதனை தொடர்ந்து அவரை பதவிநீக்கும்வரை தாங்கள் ஸ்பெயின் அணிக்காக விளையாடப்போவ தில்லை என 81 வீராங்க னைகள் தெரிவித் துள்ளனர்.



உலகக்கிண்ண உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் ஸ்பெயின் வெற்றியை தொடர்ந்தே ரூபியாலெஸ் அந்த வீராங்கனையை முத்தமிட்டுள்ளார்.

ஸ்பெயின் அவரை நீக்குவதற்கான சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ள அதேவேளை பிபா அமைப்பும் விசார ணைகளை ஆரம்பித்துள்ளது.

எனினும் ரூபியாலெஸ் பதவி விலக மறுத்துள்ளார்.

ஜெனியிடம் தான் முத்தமிடவா என கேட்டதாகவும் அதற்கு அவர் இணங்கியதாகவும் ரூபியாலெஸ் தெரிவித்துள்ளார்.

அது ஒரு தன்னிச்சையான முத்தம் பரஸ்பர மகிழ்ச்சி மற்றும் ஒருமித்த கருத்தின் வெளிப்பாடே என தெரிவித்துள்ள ரூபியாலெஸ், இதுவே முக்கியம் அது சம்மதத்துடனான முத்தம் அதுவே எனக்கு போதும் என தெரிவித்துள்ளார்.

எனினும் அதனை அந்த வீராங்கனை நிராகரித்துள்ளார்.

அவர் சொல்வது திட்டவட்டமாக தவறானது. அவர் உருவாக்கிய சூழ்நிலையை தனக்காக பயன்படுத்தும் கலாசாரத்தின் ஒரு பகுதி என அவர் தெரிவித்துள்ளார்.

விளையாட்டு, வேலை, சமூக சூழ்நிலைகள் எவற்றிலும் எவரும் விருப்பமற்ற நடத்தைக்கு பலியாகக் கூடாது என நான் கருதுவதால் நான் இந்த சம்பவம் குறித்து தெரிவிக்கின்றேன் என தெரிவித்துள்ள அந்த வீராங்கனை, நான் பாதிக்கப்படக்கூடியவளாக உணர்ந்தேன். எனது சம்மதம் இல்லாமல் மனக்கிளர்ச்சியால் தூண்டப்பட்ட பாலியல் ரீதியிலான செயலுக்கு பலியாகி விட்டேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்வாறான நடத்தையை ஏற்றுக் கொள்ளமுடியாது நாங்கள் உங்களுடன் இருக்கின்றோம் என ஜெனிக்கு ஆதரவாக இறுதிப்போட்டியில் தோற்ற இங்கிலாந்து மகளிர் அணியினர் அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளனர்.

# 115 தங்கப் பதக்கங்களுடன் மேல் மாகாணம் சம்பியன்



கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நிறைவுக்கு வந்த 47ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் மேல் மாகாணம் 115 தங்கம், 78 வெள்ளி, 89 வெண்கலப் பதக்கங்களுடன் ஒட்டுமொத்த சம்பியனானது.

தேசிய விளையாட்டுப் போட்டிகளில் மேல் மாகாணம் சமபியனானது இது 46ஆவது தடவையாகும்.

மத்திய மாகாணம் 39 தங்கம், 45 வெள்ளி, 50 வெண்கலப் பதக்கங்களுடன் 2ஆம் இடத்தையும் தென் மாகாணம் 30 தங்கம், 37 வெள்ளி, 45 வெண்கலப் பதக்கங்களுடன் 3ஆம் இடத்தையும் பெற்றன.

வட மேல் மாகாணம் (26 தங்கம், 35 வெள்ளி, 39 வெண்கலம்), வட மத்திய மாகாணம் (17 - 15 - 34), சப்ரகமுவ (13 - 22 - 51), ஊவா மாகாணம் (10 - 13 - 33). கிழக்கு மாகாணம் (7 - 9 - 8), வட மாகாணம் (5 - 9 - 2) ஆகியன முறையே 4, 5, 6, 7, 8, 9ஆம் இடங்களைப் பெற்றன.

தேசிய விளையாட்டுப் போட்டிகளின் கடைசி அம்சமான மெய்வல்லுநர் போட்டிகளில் ஆண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலி ஓட்டப் போட்டியை 50.59 செக்கன்களில் நிறைவு செய்து வெற்றியீட்டி 1101 சர்வதேச தர புள்ளிகளைப் பெற்ற மத்திய மாகாண வீரர் கே.எம்.டி. தர்ஷன அதிசிறந்த ஆண் மெய்வல்லுநராகத் தெரிவானார்.

பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியை 52.80 செக்கன்களில் நிறைவு செய்து வெற்றியீட்டி 1096 சர்வதேச தர புள்ளிகளைப் பெற்ற நடீஷா ராமநாயக்க அதிசிறந்த பெண் மெய்வல்லுநராகத் தெரிவானார்.

ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியை 10.65 செக்கன்களில் நிறைவுசெய்து தங்கப் பதக்கம் வென்ற சப்ரகமுவ மாகாண வீரர் வை.சி.எம். யோத சிங்க அதிவேக மனிதனாகவும் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியை 12.25 செக்கன்களில் நிறைவுசெய்து தங்கப் பதக்கம் வென்ற மத்திய மாகாண வீராங்கனை எப். ஷபியா யாமிக் அதிவேக பெண்ணாகவும் தெரிவாகினர்.

### புதிய போட்டி சாதனைகள்

மெய்வல்லுநர் போட்டிகளில் கடைசி நாளான சனிக்கிழமை 3 புதிய போட்டி சாதனைகள் நிலைநாட்டப்பட்டது. இதற்கு அமைய 47ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளின் மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளில் மொத்தம் 5 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

சனிக்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான முப்பாய்ச்சலில் மேல் மாகாண வீரர் எல்.சி. குமாரசிறி 16.23 மீற்றர் தூரம் பதிவு செய்து புதிய போட்டி சாதனை நிலைநாட்டினார்.

ஆண்களுக்கான 110 மீற்றர் சட்டவேலி ஓட்டப் போட்டியை 14.16 செக்கன்களில் நிறைவுசெய்த மேல் மாகாண வீரர் ஐ. லக்விஜய, ஒரு நாளுக்கு முன்னர் நிலைநாட்டிய தனது சொந்த சாதனையை (14.18 செக்.) முறியடித்த புதிய போட்டி சாதனை நிலைநாட்டினார்.

பெண்களுக்கான 4 தர 400 மீற்றர் தொடர் ஓட்டப் போட்டியை 3 நிமிடங்கள், 41.96 செக்கன்களில் நிறைவு செய்த தென் மாகாண அணி (என். லக்மாலி, நிமாலி லியனஆராச்சி, கயன்திகா அபேரட்ன, நடீஷா ராமநாயக்க) புதிய போட்டி சாதனை நிலைநாட்டியது.

இந்த சாதனையுடன் மெய்வல்லுநர் போட்டிகளில் மொத்தமாக 5 புதிய போட்டி சாதனைகள் பதிவாகின.

போட்டியின் ஆரம்ப நாளான வியாழக்கிழமை (24) நடைபெற்ற பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் 3.50 மீற்றர் உயரம் தாவிய யாழ். பல்கலைக்கழக வீராங்கனை நேசராசா டக்சிதா இம்முறை முதலாவது போட்டி சாதனையை நிலைநாட்டியிருந்தார்.

அதே தினத்தன்று பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் வி. லக்மாலி (44.59 மீற்றர்) புதிய போட்டி சாதனையைப் படைத்திருந்தார்.

### இரட்டை தங்கம் வென்றவர்கள்

பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகளில் வத்சலா ஹேரத் (10000 மீற்றர், 5000 மீற்றர்), நடீஷா ராமநாயக்க (200 மீற்றர், 400 மீற்றர்), கயன்திகா அபேரட்ன (800 மீற்றர், 1500 மீற்றர்) ஆகியோர் தலா 2 தங்கப் பதக்கங்களை சுவீகரித்தனர்.

கயன்திகா, நடீஷா ஆகிய இருவரும் தொடர் ஓட்டப் போட்டியிலும் தங்கம் வென்ற அணியில் இடம் பெற்றமை விசேட அம்சமாகும்.

கடைசி நாளான சனிக்கிழமை (26) காலை நடைபெற்ற ஆண்களுக்கான 10000 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெற்றி பெறுவார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மத்திய மாகாண வீரர் கே. சண்முகேஸ்வரன் (31:37.43) வெள்ளிப் பதக்கத்தை வென்றெடுத்தார்.

அப்போட்டியில் சப்ரகமுவ மாகாண வீரர் பி. மதுரங்க (31:37.06) தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

ஒவ்வொரு வகையான விளையாட்டுப் போட்டிகளிலும் ஆண், பெண் இருபாலாரிலும் அதி சிறந்த போட்டியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பிரதம அதிதியாக்க் கலந்துகொண்டு பிரதான பிசில்களை வழங்கினார்.

# தங்கப் பதக்கத்துடன் விடைபெற்ற லக்மாலி

தனது 23 வருட மெய்வல்லுநர் விளையாட்டுத்துறை வாழ்க்கையின் கடைசி ஈட்டி எறிதல் நிகழ்ச்சியில் தங்கப் பதக்கம் வென்ற மகிழ்ச்சியுடன் மெய்வல்லுநர் விளையாட்டிலிருந்து நதீகா லக்மாலி விடை பெற்றார்.

விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம் ஆகியன இணைந்து நடத்தும் 47ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளின் கடைசி அம்சமான மெய்வல்லுநர் போட்டிகள் தற்போது சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றுவருகின்றன.

போட்டியின் இரண்டாம் நாளான கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் 51.84 மீற்றர் தூரத்துக்கு ஈட்டியை எறிந்த 42 வயதான நதீகா லக்மாலி தங்கப் பதக்கத்தை சுவீகரித்து மெய்வல்லுநர் விளையாட்டிலிருந்து விடை பெற்றார்.

2001ஆம் ஆண்டிலிருந்து ஈட்டி எறிதலில் பங்குபற்றிவந்த நதீகா லக்மாலி 2003இல் முதல் தடவையாக தேசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றதுடன், இந்த வருடம் வரை 12 தடவைகள் சம்பியனாகி இருந்தார்.

2013 ஆசிய சம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்



தையும் 2016 ஆசிய சம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் லக்மாலி வென்றிருந்தார்.

# இங்கிலாந்தில் விளையாடவுள்ள அசித்த பெனாண்டோ



இலங்கை கிரிக்கெட் அணி வீரர் அசித்த பெர்னாண்டோ இங்கிலாந்து கவுண்டி அணியான நொட் டிங்ஹம் ஷயர் அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

அந்த வகையில், முதன் முறையாக கவுண்டி போட்டிகளில் விளையாடவுள்ள அவர், தற்போது இடம்பெற்று வரும் கவுண்டி சம்பியன்ஷிப் 2023 தொடரில் விளையாடும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

அதற்கமைய, கென்ட் கிரிக்கெட் கழகம், லங்காஷயர் கிரிக்கெட் கழகம் மற்றும் மிடில்செக்ஸ் கழகம் ஆகிய அணிகளுக்கு எதிரான மூன்று போட்டிகளில் நோட்டிங்கம்ஷையர் அணியை பிரதிநிதித்துவப்படுத்தி அவர் விளையாடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அசித்த பெனாண்டோ, கடந்த வருடம் இடம்பெற்ற ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்காக சிறப்பாக ஆடியிருந்தார்.

இவர் ஒரு சிறந்த வேகப்பந்து வீச்சாளராக இருந்த போதிலும், அன்றையதினம் வெளிப்படுத்திய துடுப்பாட்டம் மூலம் இலங்கை கிரிக்கெட் இரசிகர்களின் மனதில் அவர் இடம்பிடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் முதலாவது மின்னியல் டக்ஸி சேவையான ஈ-ட்ரைவ் சேவையை யாழ்ப்பாணத்துக்கு விஸ்தரிக்கும் DPMC

இலங்கையின் முன்னணி வாகன நிறுவனமான டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவட்) லிமிடட் நிறுவனம் தனது முன்மாதிரித் திட்டமான ஈ-ட்ரைவ் மின்னியல் முச்சக்கரவண்டி டக்ஸி சேவையை யாழ்ப்பாணத்துக்கும் விஸ்தரிப்பதாக அறிவித்துள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சூழலுக்கு நட்பான மற்றும் செலவுச் சிக்கனமான போக்குவரத்துத் தீர்வை வழங்கும் ஈ-ட்ரைவ் திட்டம் யாழ்ப்பாண நகரத்துக்கும் தற்பொழுது விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

மின்னியல் வாகனங்களே போக்குவரத்தின் எதிர்காலமாகியுள்ளது. இது புகை வெளியேற்றம் அல்லாத மற்றும் நிலத்தடி எரிபொருள்களில் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு உதவும் வகையில் சுற்றாடலுக்கு தீங்கிளைக்காததாக அமைந்துள்ளது. மின்னியல் டக்ஸியை அறிமுகப்படுத்தியதன் ஊடாக கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பது மாத்திரமன்றி, எரிபொருளுக்கான செலவீனங்களைக் குறைப்பதன் ஊடாக அந்நியச் செலாவணியைச் சேமிக்க உதவுகிறது. மின்னியல் வாகனங்களின் செயற்திறன் பயணிகளுக்கு நேரடியான நன்மையை வழங்கி குறைந்த விலையில் பயணத்துக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துகிறது.

ஈ-ட்ரைவ் திட்டமானது பயணிகளுக்கு செலவுச் சிக்கனமான போக்குவரத்து சாதனத்தை வழங்குவது மாத்திரமன்றி, இரைச்சல் குறைவான, சுமுகமான பயணத்தின் ஊடாகப் பாதுகாப்பான மற்றும் சிறந்த அனுபவத்தைப் பயணிகளுக்கு வழங்குவது என்ற உண்மையான நோக்கத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டது.

நாட்டில் ஒழுக்கமான, தொழில்முறை டக்ஸி சாரதிகள் அணியை உருவாக்கும் நோக்கத்துடன், **DPMC** ஈ-ட்ரைவ் டக்ஸி சேவையின் சாரதிகளுக்கு மீண்டும் பயிற்சியை உறுதிசெய்துள்ளது. இந்த வாகனத்தை எப்படி செலுத்துகின்றனர் என்பது மட்டுமல்லாது, வீதிகள் மற்றும் வீதி நடைமுறைகள் குறித்த புத்தாக்கப் பயிற்சியையும் பெற்றுள்ளனர். கம்பனியினால் மத்தியிலிருந்து மேற்கொள்ளப்படும் கண்காணிப்பானது பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகிறது. ஏதாவது நிகழ்வுகள் அல்லது சாரதிகள் தொடர்பான கருத்துக்களை வழங்குவதற்காக சீருடையணிந்த ஈ-ட்ரைவ் சாரதிகளின் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் அவர்கள் பற்றிய விபரங்கள் வாடிக்கையாளர்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட முச்சக்கர வண்டிகளைப் பதிவுசெய்த முதலாவது நிறுவனம் என்பதையிட்டுப் பெருமையடைவதாகத் **DPMC** இன் பணிப்பாளரும், பிரதம செயற்பாட்டு அதிகாரியுமான திரு.நாளக மடுகல்ல பெருமையை வெளிப்படுத்தினார். அவர் குறிப்பிடுகையில், “சூழலுக்கு நட்பான, செலவுச் சிக்கனமான போக்குவரத்து வாய்ப்புக்களைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு அப்பால் எமது குறிக்கோள் நீடித்துச் செல்கிறது. தொழில்முறை ரீதியாகப் பயிற்சியளிக்கப்பட்ட சாரதிகளின் ஊடாக பயணிகளுக்குப் பாதுகாப்பான முச்சக்கரவண்டி சேவையை வழங்குவதில் புதிய எல்லையை உருவாக்கவுள்ளோம்” என்றார்.




முதற்கட்டமாக ஈ-ட்ரைவ் மின்னியல் முச்சக்கரவண் டிகள் யாழ்ப்பாண நகரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் செயற்படுத்தப்படவுள்ளன. யாழ்ப்பாணம் பிரவுண் வீதியில உள்ள **DPMC Workshop** மற்றும் பலாலி வீதியில் உள்ள **DPMC** பிராந்திய அலுவலகத்தி லிருந்து இந்தச் சேவையை இலகுவாக அணுக முடியும். வெள்ளை மற்றும் பச்சை நிறம் கலந்த தனித்துவமான நிறத்தினால் இந்த முச்சக்கரவண்டிகளை இலகுவில் அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்பதுடன், திங்கள் முதல் சனிக்கிழமை ஆகிய நாட்களில் மு.ப 7 மணி முதல் பி.ப 7 மணிவரை இதன் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.









பயணிகள் வீதியில் செல்லும் ஈ-ட்ரைவ் மின்னியல் டக்ஸியை இலகுவில் நிறுத்திக் கொள்ள முடியும் அல்லது **077 806 8060** என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி இச்சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த முச்சக்கரவண்டிகள் ஒரு கிலோமீட்டருக்கு 90 ரூபாய் என்ற நேரடியான கட்டணத்தைக் கொண்டிருப்பதுடன், நெரிசல் நிறைந்த நேரத்துக்கான கட்டணம் (நயம ாழரச) போன்ற எந்தக் கட்டணமும் வசூலிக்கப்படாது. அனைத்து வாடிக்கையாளர்களின் சௌகரியத்தையும் கருத்தில்கொண்டு பணம் அல்லது அடன் அட்டைஃபற்றுமதி அட்டை மூலம் எளிதாகப் பணம் செலுத்தக் கூடிய புத்தாக்கமான அம்சமும் காணப்படுகிறது.

மேலதிக தகவல்களுக்குத் தொடர்புகொள்ளவும்: **0777597839.**

---

# சமூகம் போற்றும் பணியாளன் ‘ஐயா மாஸ்ரர்’

எளிமையும் அமைதியும் நிறைந்த உருவம், புன்னகைக்குள் மொத்த ஆளுமையையும் புதைத்து வைத்த தோற்றம், நேர்த்தி மிகு உழைப்பின் வடிவம், அதுதான் ‘ஐயா மாஸ்ரர்’ என எல்லோராலும் அறியப்படும் பாலசுப்பிரமணியம் சண்முகம் அவர்கள். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியராக நிறைந்த சேவைபுரிந்தவர்ளூ சங்கரத்தை கரந்தை குளவத்தை முருகன் ஆலயத்தின் தொண்டனாக, பரிபாலகர்களில் முக்கிய தூணாக விளங்கி, ஆலய வளர்ச்சியிலும் ஆலயத்தினூடான கிராம ஆன்மீக எழுச்சியிலும் பங்குதாரராக இருப்பவர்ளூ கிராம இளைஞர்களின் வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் திகழ்பவர்ளூ நாடுவோர் தேவை அறிந்து உதவும் இயல்பாளர் எனப் பல்வகை வகிபாகங்களை உடையவராகத் திகழ்பவர் இவர். இதனால் சங்கரத்தை, வட்டுக்கோட்டை மக்களின் நன்மதிப்பை வென்றெடுத்தவர். திரு. பா. சண்முகம் அவர்களின் கல்வி, சமய, சமூகப் பணிகளைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில் சங்கரத்தைக் கிராம மக்களும் ஆசிரியரின் பழைய மாணவர்களும் இணைந்து எதிர்வரும் 26ஆம் திகதி ‘பணிநயப்பு விழா’ எடுக்கவிருப்பது சிறப்பானது.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, ஐயாவின் பிரதான சேவை மையமாகும். இருபத்தைந்து ஆண்டுகள் ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக எனப் பலநிலைகளில் கல்லூரியில் பணியாற்றி, பல மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதில் பிரதான பங்கு வகித்தவர். மாணவர்கள் பொதுவாகப் பாகற்காயாகக் கருதும் கணித பாடத்தைச் சக்கரைப் பாகுபோல இதமாக்கிக் கற்பிக்கும் நுட்பம் பலரது வாழ்வில் ஒளியேற்றியிருக்கிறது. இதனாலேயே மாணவர்கள் இவரின் பால் இலகுவாக ஈர்க்கப்பட்டார்கள். பாடசாலைக்குப் புறம்பாக சங்கரத்தையில் பிரத்தியேக கணித வகுப்பை நடாத்திய ஆசியரிடம் பல பாடசாலை மாணவர்களும் கற்றுப் பயன்பெற்றிருக்கிறார்கள். அந்த வகுப்பில் கற்று, அவரது கற்பித்தல் திறனை நுகர்ந்து சிலிர்த்த அனுபவம் எனக்கு உண்டு. கற்றல் கற்பித்தலில் மட்டுமன்றி மாணவர்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு, இயல்பாகவும் இலகுவாகவும் அவற்றைத் தீர்த்துவிடுவதிலும்



பதின்ம வயது மாணவர்களை நுட்பமாகக் கையாண்டு வழிநடத்துவதிலும் ஐயாவின் திறமை அலாதியானது. இதனாலேயே மாணவர்களின் விருப்பிற்கும் பெற்றோர்களின் நம்பிக்கைக்கும் உரியவராகத் திகழ இவரால் முடிந்தது. சக ஆசிரியர்களோடும் அதிபரோடும் மட்டு மன்றி பாடசாலைச் சமூகத்தினரோடும் நல்லுறவு களைக் கட்டியெழுப்பியவராக விளங்கிய ‘ஐயா மாஸ்ரர்’ மேலதிகாரிகளின் மதிப்பையும் பெற்றிருந்தார். அதே வேளை தனது எண்ணங்களையும் விருப்பங்களையும் உரியவாறு முன்வைத்து அவற்றை நிறைவேற்றிக்கொள் வதில் வல்லவராகவும் இருந்தார். இவ்வாறான இவரது முழுமையான ஆசிரியத்துவம் வியப்பைத்தருவதாகும். இவருடன் ஆசிரியராகப் பணியாற்றிய காலம் அற்புத மானது. பலதைக் கற்றுத்தந்தது.

வட்டு. மத்திய கல்லூரியாகத் திகழும் பாடசாலை 2000ஆம் ஆண்டுவரை திருஞானசம்பந்த வித்தியாசாலை என்ற பெயருடனேயே விளங்கிவந்தது. தரம் 2 பாடசாலையாக இருந்த மேற்படி பாடசாலையை க.பொ.த(உ/த) வகுப்புகளை நடாத்தும் தரம் 1சீ பாடசாலையாகத் தரம் உயர்த்தவும் வட்டு. மத்திய கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யவும் கல்லூரி அதிபரும் வட்டு. இந்து வாலிபர் சங்கமும் கல்லூரிச் சமூகமும் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. அந்நாட்களில் அதிபரின் வலது கரமாகச் செயற்பட்டதோடு வட்டு. இந்து வாலிபர் சங்கம், கல்லூரிச் சமூகம் என்பவற்றோடு இணக்கமான உறவினைப் பேணித் தொடர்பாடி முயற்சிகள் வெற்றிபெறச் சிரத்தையுடன் உழைத்தவர் ‘ஐயா மாஸ்ரர்’ என்பது மறுக்கமுடியாத உண்மை. அது மட்டுமன்றி விளையாட்டுத் துறை உள்ளிட்ட இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் கல்வி அடைவுகளிலும் சமூகஞ்சார் செயற்பாடுகளிலும் அன்று பாடசாலை தனித்துவத்தோடு மிளிர்ந்தது. பாடசாலைக்கான கட்டடங்கள் உள்ளிட்ட பௌதிக வளத்தேவைகள் பெரும்பாலும் நிறைவுசெய்யப்பட்டிருந்தன. இத்தகைய சாதனைகள் எல்லாவற்றிலும் ‘ஐயா மாஸ்ரரின்’ வியர்வைக்கும் உழைப்புக்கும் இருந்த பங்கு நிராகரிக்க முடியாதது. வட்டு. மத்திய கல்லூரியில் மூன்று அதிபர்களின் கீழ் பணியாற்றிய ‘ஐயா மாஸ்ரர்’ அவர்களது பணிகளின் முள்ளந்தண்டாகச் செயற்பட்டார் என்பதை அவர்களில் எவரும் மறுக்கமாட்டார்கள் என நம்புகிறேன். சுருக்கமாகச் சொல்வதாயின் வட்டு. மத்திய கல்லூரியின் பொற்காலத்தின் பங்காளி இவர்.

சங்கரத்தை கரந்தை குளவத்தை முருகன் கோயிலின் வளர்ச்சியிலும் அவ்வாலயத்தினூடாக முன்னெடுக்கப்படும் ஆன்மீகச் செயற்பாடுகளிலும் ஐயா பிரதானமாகப் பங்கெடுத்து வருகின்றார். ஆலயத்தில் அறநெறிப்பாடசாலையொன்றை நிறுவுவதிலும் செயற்படுத்துவதிலும் ஐயா கிராமத்தவர்களோடு இணைந்து உழைத்தார். அதன் மூலம் கிராம இளைய சமூகத்தினர் மத்தியில் ஆன் மீக அறிவைப் பரப்புவதிலும் விழுமியப் பண்புகளை மேம்படுத்துவதிலும் பங்களிக்கமுடிந்தது. கிராம மாணவர்களுக்கு இலவசமாக வகுப்புகளை நடாத்தியுள்ளார் என்பதோடு சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்துடன் இணைந்து இன்னும் பல சமூக, சமய பணிகளை ஆற்றி வருவதுடன் இளைஞர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டியும் வந்துள்ளார். எல்லோரோடும் இனிமையாகப் பழகும் இயல்பும் தேவையறிந்து உதவும் மனப்பாங்கும் பலராலும் நேசிக்கப்படும் ஒருவராக ஐயா திகழ்வதற்கு அடிப்படையாகின. ஐயா பல்லாண்டு வாழ்ந்து சமூகத்திற்குப் பயன்பட இறைவன் அருள்புரிவானாக.

**சிவகுருநாதன் கேசவன்**
**விரிவுரையாளர்**
**சியன தேசிய, கல்விக்கல்லூரி**

# வித்துவான் க. ந. வேலன் நூற்றாண்டு: ‘சாவினை வென்றவன் வேலன், அறிவையோ’

மு. நித்தியானந்தன்

வடபுலத்தின் ஆழ்ந்தகன்ற தமிழ்ப் புலமைமரபின் நீட்சியாக வித்துவான் க.ந.வேலன் (1923-2003) நிலைபெறுகிறார். சுன்னாகம் ஊரெழுவில், கதிர்காமர் நல்லதம்பிக்கும் செல்லாச்சிப்பிள்ளைக்கும் மகனாய்ப் பிறந்த இரத்தினவேல், பின்னாளில் தன்னை ‘வேலன்’ என்று அறிவித்தார்.

வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும், கொழும்பு சென்பெனடிக்ற் கல்லூரியிலும் வேலன் பயின்றிருக்கிறார். இளமையில் தந்தையை இழந்த வேலன் நெஞ்சில், இளமையிலிருந்தே தமிழ் இலக்கியத்தை, இலக்கணத்தை கசடறக் கற்கவேண்டும் என்ற வேணவா ஆழ வேரூன்றியிருந்திருக்கிறது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயில அனுமதிபெறுவதற்கு பரிந்துரை செய்யுமாறு கேட்க விபுலானந்த அடிகளை அணுகினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராய் அமர்ந்து, பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகத் திகழ்ந்தவர் விபுலானந்தர். வேலன் என்ற இளைஞன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்து, அங்கிருந்து காலிவீதி வழியே நடந்து, வெள்ளவத்தை ராமகிருஷ்ண மடத்தில் விபுலானந்தரைக் காணச் செல்கிறார். அங்கே, முற்றத்தில் உலவிக்கொண்டிருந்த காவி ஆடை தரித்திருந்த ஒருவரை அணுகி, விபுலானந்தரைக் காணவேண்டும் என்று கேட்டிருக்கிறார். அவர் ‘என்ன விடயமாய்?’ என்று கேட்டிருக்கிறார். விபுலானந்தரிடம் கேட்கவேண்டியதை இவரிடம் எப்படிச் சொல்வது என்று வேலன் தயங்கியிருக்கிறார். ‘சும்மா சொல்லுங்கள், நான்தான் விபுலானந்தன்’ என்கிறார் விபுலானந்தர்.

‘குரலில் கடுமை தொனித்தது. விபுலானந்தரோ, கும் இருட்டைக் காவி உடையில் சுருட்டிவைத்ததுபோல் காட்சியளித்தார்’ என்று பதிவு செய்கிறார் வேலன். மிகுந்த அதிருப்தியோடு மீண்ட வேலன், தன் இலட்சியத்திலிருந்து பிறழவில்லை.

தமிழகம் சென்று நாடிமுத்துப்பிள்ளை என்ற பிரமுகரை அணுகுகிறார். அவரைக்காண சந்தர்ப்பம் கிடைக்காத நிலையில், அவரது வீட்டுச் சேவகனிடம் சீட்டுக்கவி புனைந்து அனுப்புகிறார் வேலன்.

அந்தக் கவி இது:

**பாடும் புலவனல்லன் பரிசில்பெறு மொருவனல்லன்**
**நாடும் கலை பயில வந்தவனே நாடுபுகழ்**
**நாடிமுத்துப் பிள்ளை நின்னை நான் காணவந்து தினம்**
**நீடீரண் டாகுதையா**

அவரின் சிபார்சின்பேரில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து, அங்கு வித்துவான் பட்டமும் பி.ஓ.எல். பட்டமும் பெறுகிறார். ஔவை துரைசாமிப்பிள்ளை, சிதம்பரநாதன் செட்டியார் போன்ற ஆன்றவிந்தடங்கிய அறிஞர் பெருமக்களிடம் பாடம் கேட்கும் வாய்ப்பினைப் பெற்றார். திமிர்ந்த ஞானச் செருக்குடன் இலங்கை திரும்புகிறார் வேலன்.

தமிழ் மொழியின் அருமைபெருமையினைக் கண்ணெனப் போற்றும் பெருந்தகையாளராகப் பொலிந்தார். மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் யாழ். ஸ்ரான்லிக் கல்லூரியிலும் தமிழாசிரியராகக் கால்நூற்றாண்டிற்குமேல் பணியாற்றிய பேராசானாக வேலன் சிறப்புப்பெற்றவர். வேலன் ஆசிரியராகப் பணியாற்றிய காலப்பகுதியில் தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் ஆங்கிலம் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் சம்பளத்தில் பாரிய வேறுபாடிருந்தது. தமிழ் ஆசிரியர்களுக்கு மிகச் சொற்பசம்பளமே வழங்கப்பட்டது. சம்பளத்தாலல்ல, தமிழ் கற்பிக்கும் ஆசிரியப் பணியினை அவர் மேலாக மதித்தார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வேலன் தமிழ் போதிக்கும் ஆசிரியனாக இருந்த காலத்தில், அக்கல்லூரி அதிபர் ஒரு சந்தர்ப்பத்தில், **‘Anybody can teach Tamil’** என்றிருக்கிறார். ஆர்த்தெழுந்திருக்கிறார் வேலன்.

‘எனிபொடி கன் ரீச் தமிழோடா? எங்கே ‘அ’ விலிருந்து ‘ன்’ வரைக்கும் தமிழெழுத்து முழுவதையும் ஒழுங்காய்ச் சொல் பார்ப்போம்’ என்று அதிபரின் சால்வையைப்பிடித்து உலுக்கியிருக்கிறார் வேலன்.

**‘அந்த மொழி (ஆங்கிலம்) பரப்புதற்குக் கோடிகோடி**
**தூங்காமற் பணி செய்வோர் கோடிகோடி**
**தூய தமிழ் படிப்பதற்கு ஆளே இல்லை**
**தூற்றுதற்கோ நம்மவருள் கோடிகோடி’**

என்று தனது ஆற்றாமையாய் வெளிப்படுத்தினார்.

தமிழ் கற்பிப்பதை மிக உயர்ந்த பணியாக மதித்துப் போற்றியவர் அவர். வகுப்பறையில் அவர் வளர்த்துவிட்ட மாணாக்கர் பல்லாயிரம். பொது வெளியில், கருத்தரங்குகளில், அரசியல் மேடைகளில், சமயச் சொற்பொழிவுகளில், நூல் வெளியீடுகளில் அவர் ஆற்றிய தமிழுரைகளின்பால் ஈர்ப்புக்கொண்டோர் கணக்கற்றோர்.

‘கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம்: மந்தரை சூழ்ச்சிப் படலமும் கைகேயி சூழ்வினைப்படலமும்’ (கலைவாணி புத்தக நிலையம், 1964) என்று, க.பொ.த.

> **‘எனிபொடி கன் ரீச் தமிழோடா? எங்கே, ‘அ’ விலிருந்து ‘ன்’ வரைக்கும் தமிழெழுத்து முழுவதையும் ஒழுங்காய்ச் சொல் பார்ப்போம்’ - அதிபரின் சால்வையைப்பிடித்து உலுக்கினார் வேலன்**

(சாதாரண தரம்) பாடத் திட்டத்திற்கு அமைவாக க. ந. வேலன் எழுதிய உரைவிளக்கம் ஈழத்தின் தலையாய உரைநடை ஆசிரியராக வேலனைப் பதிவு செய்கிறது. ‘இந்நூலில் பாடல்களுக்குப் பதவுரையும், தூய நடையில் பொழிப்புரையும் மாணவர்களுக்குப் பயன்படும் முறையில் தெளிவை அளிக்கும் சிறந்த விளக்கமும், செய்யுள் நயம் காணும் முறையும், அருஞ் சொற்பொருளும் நலம் பெற அமைந்துள்ளன’ என்று அக்காலத்தில் இந்நூல் பாராட்டைப் பெற்றுள்ளது. சங்க இலக்கியத்திற்கு உரை எழுதும் வளம் ஈழத்தில் அருகிவரும் நிலையில், வேலன் தனித் திறம்கொண்ட உரைநடை வல்லாளராக மிளிர்கிறார்.

இலங்கையில் கம்பன் கழகத்தின் தூண்களில் ஒருவராகத் திகழ்ந்து, கம்பனின் புகழ் பரப்பும் அறிஞராகத் திகழ்ந்தார். கம்பவாரிதி ஜெயராஜ் வேலனைத் தனது உயர்ந்த குருவாக வணங்கிப் போற்றுகிறார். பாரதியின் கவிதைகளை, பாரதியின் கவித்துவத்தை யாழ் மண்ணில் பதியமிட்டவர் வேலன்.

பழந்தமிழ்ப் பாரம்பரியத்தில் தோய்ந்த வேலன், தேர்ந்த சைவச் சித்தாந்தியாகத் திகழ்ந்தார். காரைக்காலம்மையாரை வழுதேத்தியவர். ‘ஈழத்துச் சிவயோக சுவாமிகள் ஏற்றிய ஞானவிளக்கு’ என்ற வேலனின் நூல் அவரது ஆத்மீகச் சிந்தனையின் ஞானப்பொழிவு. மூத்த சித்தர் திருமூலரிலிருந்து, தாயுமானவரிலிருந்து, யோகசுவாமிகள் வரை கோலமிட்டு, யோகர் சுவாமிகளின் சிறப்பினை வேலன் அருமையாக வெளிப்படுத்தியுள்ளார்.

வாழ்வை, மரணத்தை புறம் நின்று பார்த்துச் சிரித்த சித்தனாக அவர் பலசமயங்களில் தோற்றம் தருகிறார். சமரசங்கள் எதற்கும் அவர் விலைபோனதில்லை. என்றும் தன் நெஞ்சிற்கு நேர்மையாக இருந்திருக்கிறார். ‘சாவினை வென்றவன் வேலன் அறிவையோ?’ என்று பிரகடனம் செய்தவர் வேலன்.

வேலன் எழுதிய ‘கண்ணகி சிந்தாத கண்ணீர்’ என்ற இலக்கிய நூல் அவர் சிலப்பதிகாரத்தில் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டையும், அப் பெருங் காப்பியத்தைப் புதிய கோணத்தில் அணுகும் அவரின் இலக்கியச் செழுமையையும் தெளிவுபடுத்துகிறது.

வேலன் எழுதிய ‘எனது காமத்துப்பால்’ காமம் குறித்த தனித்துவம் வாய்ந்த நூலெனத் துணியலாம். ‘வருக, தமிழர் பொற்காலம்’ என்ற நூல் வேலனின் கவிதைத் தொகுப்பாகும். அவர் வாழ்ந்த காலத்திலேயே வேலனின் பதின்மூன்று நூல்கள் வெளியாகியிருந்தன.

ஈழத்து அரசியல் அவதானியாக க.ந.வேலன் ஆக்கிய ‘ஈழத்தமிழர் யார்?’ (2000) என்ற அரசியல் நூல் சர்ச்சைக்குரிய நூலாகும்.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தென் ஆபிரிக்காவிற்கு 1998ஆம் ஆண்டு விஜயம் செய்தபோது, அங்கு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளிக்கையில் ‘ஈழத் தமிழர்கள் இலங்கையின் பூர்வகுடிகள் அல்ல’ என்று தெரிவித்தமை, ஈழத் தமிழர்கள் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. ஈழத்தமிழர்கள் வந்தேறு குடிகள் என்ற கருத்தினை அது வெளிப்படுத்தியது.

சந்திரிகா அம்மையாரின் இந்தக் கருத்திற்கு எதிராக அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் வாதங்களை முன்வைக்கும் நோக்கில் வேலன் இந்நூலை ஆக்கியுள்ளார். ஈழத்தமிழர்கள் பூர்வகுடிகள் என்பது இன்றும் என்றும் நிறுவியாகவேண்டிய வாதமல்ல எனினும்,

காலத்திற்குக் காலம் பேரினவாதிகள் இந்த வாதத்தை முன் நிறுத்தியே வந்துள்ளனர்.

மலையகத் தமிழர், முஸ்லிம்கள்பற்றி வேலன் இந்நூலில் முன்வைக்கும் கருத்துகள் வியப்பை ஏற்படுத்துவன. மானுடநேயம் மிக்க வேலன், இவ்விரு இனத்தவர்கள் பற்றிக்கூறும் கருத்துகள் எளிதில் கடந்து சென்றுவிடக்கூடியன அல்ல.

வேலன் இந்நூலில் மலையகத் தமிழர் குறித்து வெளியிடும் கருத்துகள் இவை:

‘இலங்கையில் வாழும் இஸ்லாமியருள் சிலரும், இந்திய வம்சாவளியினரும் வந்தேறு குடிகள் என்பதை விளங்கிக்கொள்வதில் அதிக சிரமமில்லை.’

‘மலைநாட்டில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றம் என்றும் இது தடை செய்யப்படவேண்டும் என்றும் ஓர் இந்திய வம்சாவளி அரசியல்வாதி கூறினார்.’

‘மலைநாட்டில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்தவர் யார்? அந்த மண்ணின் மைந்தர்கள் யார்? இந்த மண்ணுக்கு இப்போது உரிமைகோரும் இவர்கள் எப்போது வந்தவர்கள்? உண்மையில் அத்துமீறிக் குடியேறியவர்கள் யார்? பொறுப்பற்ற இத்தகைய பேச்சு, சிங்கள மக்களை வெறி கொள்ளச் செய்யாதா?’

‘உரிமைக்காகப் போராடும் வம்சாவளியினர் கூறும் வலுவான காரணம் இந்த நாட்டின் செழிப்புக்குப் பாடுபட்டோம் அந்நியச் செலாவணியைப் பெறவைத்தோம் என்பதுதான். அவர்கள் தம்மை வாழ வழிவிடாத தாய் நாட்டைத் துறந்து இங்கு வந்தது வாழ்வதற்காக, வேலை பெற்று இந்த நாட்டை வளப்படுத்தி அந்நியச் செலவாணியைப் பெருக்குவதற்கு அல்ல’

வேலன் முன்வைக்கும் இந்த வாதங்கள் புதியன அல்ல. டொனமூர் காலத்திலிருந்து டி. எஸ். சேனநாயக்க, பிரான்சிஸ் மொலமூரே, சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா, ஜி. சி. எஸ். கொரியா, எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க, சேர். ஜோன் கொத்தலாவல போன்றோர் தங்கள் வாழ்நாள் முழுதும் இதே வாதங்களை முன்வைத்துவந்துள்ளனர்.

# நோய் வாய்ப்பட்ட 47 வயதுப் பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்தவர் கைது

திருமலை, ஓக. 28

திருகோணமலை, தெவனிபியவர பகுதியில் 47 வயதுடைய நோயுற்ற பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹதிவுல்வெவ தெவனிபியவர பகுதியில் நோயுற்ற நிலையில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸ் அவசர இலக்கத்துக்கு அழைப்பெடுத்து முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான அதே பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நபரை கைது செய்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் உட்பட குறித்த பெண்ணின் கணவர் மற்றும் அயல் வீட்டுக்காரர் கூட்டாக இணைந்து குறித்த பெண்ணின் வீட்டில் மது அருந்திவிட்டு, மஹதிவுல்வெவ பிரதேசத்தில் இடம்பெற்ற இசைக்கச்சேரி நிகழ்ச்சி ஒன்றுக்குச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து, கைதான குறித்த சந்தேக நபர் தாம் மது அருந்திய வீட்டுக்கு வந்து, நோயுற்ற நிலையில் இருந்த பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதுடன், தனது விருப்பத்துக்கு இணங்காத பட்சத்தில் பெண்ணை தாக்கி காயப்படுத்தியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட குறித்த பெண் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை மொரவெவ பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஓட்டமாவடி விபத்தில் காயமடைந்தவர் பலி!

மட்டக்களப்பு, ஓக. 28

மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த புஹாரி நுஜைக் அஹமட் (வயது 25) சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு கொழும்பு வீதியில் ஓட்டமாவடி - புனானை எனும் இடத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஆசிரியரான ஸர்பராஸ் ஹூஸைன் முஹம்மது அஸாம் (வயது-25) உயிரிழந்துள்ளதுடன், புஹாரி நுஸைக் அஹமட் என்பவர் காயமடைந்த நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

(அ)

# இராணுவ மினி முகாம் அகற்றப்பட்டது



அம்பாறை, ஓக. 28

நீண்ட காலமாக தற்காலிக கட்டடம் ஒன்றில் இயங்கி வந்த சிறிய இராணுவத்தின் முகாம் அகற்றப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட கடற்கரை வீதியில் குறித்த முகாம் அமைந்திருந்ததுடன் அம்முகாமில் இருந்து செயற்பட்ட இராணுவத்தினர் பொதுமக்கள் பாதுகாப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டு வந்தனர்.

தினமும் வீதி ரோந்து மற்றும் தற்காலிக சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட இம்முகாம் இராணுவத்தினர் தற்போது தமது செயற்பாடுகள் அனைத்தையும் நிறுத்தி அவ்விடத்தில் இருந்து அகன்றுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் கடந்த காலங்களில் இடம்பெற்றமை காரணமாக இப்பகுதியில் பல தரப்பினரின் வேண்டுகோளுக்கமைய குறித்த இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொத்துவில் சிறுவர்களுக்கு இலவச மருத்துவ முகாம்



அம்பாறை, ஓக. 28

தோள் கொடு தோழா 97 நண்பர்கள் வட்டம் அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை பொத்துவில் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பொத்துவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட லண்டனில் சிறுபிள்ளை விசேட வைத்திய நிபுணர்களாகக் கடமையாற்றும் வைத்தியர்களான பௌமி ஹசன், ஷர்மி ஹசன் ஆகியோர் பங்குபற்றி 100 இற்கும் மேற்பட்ட 14 வயதிற்குட்பட்ட நீண்ட நாட்களாக நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்ற சிறுவர்களுக்கும், ஆரம்ப கட்ட பாதிப்புகளுக்கு உள்ளான சிறுவர்களுக்கும் இங்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந் நிகழ்வில் பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் 97 நண்பர் வட்ட அமைப்பின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

